# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 பங்குனி 14 வெள்ளிக்கிழமை 27.03.2020 கதிர் 142


**இனி து ரகசியம் அல்ல!**

இலங்கை அரசின் 'கொரோனா கொண்ட்ரோல் ஒப்பரேசன்' முழு அளவில் ராஜபக்ஷக்களின் குடும்ப விவகாரமாகி விட்டது என்று ஆளும் தரப்பில் முக்கியஸ்தர் ஒருவர் நேற்று முன் 02

# வடக்கிலே பாதிப்புற்றோருக்கு உதவியளிக்கிறது கூட்டமைப்பு

## உள்ளூராட்சிச் சபைகளின் நிதியைப் பயன்படுத்தி நிவாரணம் வழங்க ஏற்பாடு என்கின்றார் மாவை



யாழ்ப்பாணம், மார்ச் 28

வடக்கில் ஊரடங்கினால் தொழிலிழந்து வீடுகளில் முடங்கி இருக்கும் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சிச் சபைகளின் சபை நிதியை ஒதுக்கீடு செய்து உதவிப் பொருள்களை வழங்கத் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார். 02

## 106 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், மார்ச் 27

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 4 பேர் நேற்று (மார்ச் 26) வியாழக்கிழமை இரவு அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார மேம்பாட்டுத் திணைக்களத்தின் 02

## ஜனாதிபதி செயலகத்தின் மக்கள் தொடர்பாடல் பிரிவு 24 மணி நேரமும் சேவையில்



ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய நிலவும் நிலைமையை கருத்தில் கொண்டு, மக் களின் முறைப்பாடுகளை பெற்றுக் கொள் 02

## மரக்கறி, மீன்களை மாவட்டத்துக்குள்ளே முல்லைத்தீவில் சந்தைப்படுத்த ஏற்பாடு

முல்லைத்தீவு, மார்ச் 28

முல்லைத்தீவு மாவட்டத்தில் பிடிக்கப்படுகின்ற மீன் மற்றும் உற்பத்தி செய்யப்படுகின்ற மரக்கறி வகைகளை மாவட்டத் திற்குள்ளேயே கிராமங்கள் தோறும் சென்று சந்தைப்படுத்த ஏற்பாடுகளை மே ற்கொண்டுள்ளதாக மாவட்ட செயலாளர் க.விமலநாதன் 02

## யாழ்ப்பாணத்தில் வீட்டு வாசலுக்கே வரும் பொருள்கள்!

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ். மாவட்டத்தில் உலர் உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துகளை வீடுகளுக்கே கொண்டு சென்று வழங்கும் வியாபார நிலையங்கள் மற்றும் மருந்தகங்களின் விவரம் யாழ். மாவட்ட செயலகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தமக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப்பொருள்கள் மற்றும் மருந்துகள் தொடர்பில் தொலைபேசி ஊடாக ஓடர் வழங்கினால் அவை வீடுகளுக்குக் கொண்டு வந்து வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுப் 02

## அரச துறை ஊழியர்களின் சம்பளம் ஏப்ரல் 10 க்கு முன்

கொழும்பு, மார்ச் 27

அரச துறை உத்தியோகத்தர் களின் ஏப்ரல் மாத சம்பளம் வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் வழங் கப்பட்டும் என்று திறைசேரியின் செயலாளர் அறிவித்துள்ளார்.

அரச துறை உத்தியோக்கத்தர்களின் ஏப்ரல் மாதம் சம்பளம் எதிர்வரும் 7 ஆம் திகதி என்று முன்னர் 02

## பலசரக்குக் கடைகளை வடக்கில் தொடர்ந்து திறப்பதற்கு அனுமதி

### மேலும் பல தீர்மானங்கள் ஆளுநரால் அறிவிப்பு

( முழு விவரங்களும் 11 ஆம் பக்கத்தில்)

## குற்றவாளிக்குப் பொது மன்னிப்பா? முன்னாள் ஆளுநர் கடும் அதிருப்தி!



ஜனாதிபதி பொதுமன்னிப்பு எம்முடைய சமூக நீதி, நல் லிணக்கம் மற்றும் ஆழமான ஜனநாயகத்தை முன்னேற்றுவதற்காகவே இருக்க வேண்டுமென தெரிவித்துள்ளார் முன்னாள் வடமாகாண ஆளுநர் சுரேன் இராகவன். 02

## பொலிஸாரின் விடுப்புகள் ஏப்ரல் 10 வரை நிறுத்தம்!

கொழும்பு, மார்ச் 27

அனைத்து பொலிஸ் உத்தி யோகத்தர்களின் விடுப்புகளுக்கு மான அனுமதியை எதிர்வரும் ஏப்ரல் 10ஆம் திகதிவரை இடைநிறுத்துமாறு பதில் பொலிஸ் மா அதிபர் 02

## 4 பேர் குணமடைவு

யாழ்ப்பாணம், மார்ச் 28

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான மேலும் நான்கு பேர் நேற்று குணமடைந் துள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள் ளது. 02




## ஓய்வூதிய கொடுப்பனவு ஏப்ரல் 4 இல்

கொழும்பு, மார்ச் 27

ஓய்வுநிலை அரச துறையினரின் ஏப்ரல் மாத ஓய்வூதியம் எதிர்வரும் 4ஆம் திகதி வழங்கப்படும் 02


## அறிவித்தல்கள் – விளம்பரங்கள்

உங்களின் நிலை அறிந்து நாங்கள் உதவுகிறோம்!

அத்தியாவசிய, அவசர அறிவித்தல்கள் இலவசம்!
ஏனையவை மிகக் குறைந்த கட்டணத்தில்!!

வீட்டில் இருந்தவாறே உங்கள் தேவைகளையும் தகவல்களையும் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள். தினமும் காலையும் மாலையும் ஊரில் மட்டுமல்ல உலங்கெங்கும் வாழும் பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் கைபேசிகள் மற்றும் கணினிகளில் தவழும் காலைக்கதிர் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரியுங்கள்.

மிகக் குறைந்த கட்டணங்கள்

விளம்பரங்களை இப்பொழுது பிரசுரியுங்கள்!
பின்னர் கட்டணத்தைச் செலுத்தலாம் !!

தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தினம்தொலைபேசியில்குறைப்பட்டுக் கொண்டார் என்றும், அதன் விவரத்தை இன்று இப்பத்தியில் பார்க்கலாம் என்றும் தெரிவித்து நேற்று எனது வரைவைநிறுத்திக்கொண்டேன்.

கொரோனாவிடயங்களைக் கையாள்வதற்கானஒட்டுமொத்தப் பொறுப்பும் நாட்டின்ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷவிடம். அவரது மூத்த சகோதரரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகையில்இருந்தேஅப்பணிகள் கையாளப்படுகின்றன. ஜனாதிபதி கோட்டாயவிற்குப் பதிலாக, அதற்கான நேரடித் தலைமைத்துவத்தைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே வழங்குகின்றார்.

இப்போது இந்த விடயங்களை முன்னெடுத்துச் செல்வதற்காக 'அத்தியாவசியமான பொதுச்சேவைகளை வழங்குதல், வழி நடத்துதல், ஒருங்கிணைத்தல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றுக்கான விசேட செயலணி' ஒன்று ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டிருக்கின்றது.

பிரமர்மஹிந்தராஜபக்ஷவின் கண்காணிப்பில் அலரி மாளிகையில் இந்தச் செயலணி செயற்படும். செயலணிக்குத் தலைவர் பஸில் ராஜபக்ஷ.

இந்தப் பணிகளில் சமல் ராஜபக்ஷவும், பஸில்ராஜபக்ஷவும் சேர்ந்துள்ளனர்என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாடு முழுவதும் மின்சக்தி, நீர்வழங்கல், கழிவு முகாமைத்துவம், எரிபொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்கள் வழங்கல் மற்றும் பகிர்ந்தளித்தல், விலைக் கட்டுப்பாடு ஒருங்கிணைப்பு மற்றும் முகாமைத்துவம், பிரதேச மற்றும் மாவட்ட நிர்வாக நடவடிக்கைகள், ஒருங்கிணைத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல், கிராமிய பொருளாதாராத்தை நடத்திச்செல்லுதல்தொடர்பான ஒருங்கிணைப்பு மற்றும் முகாமைத்துவம், தேசியபொருளாதாரத்தை நடத்திச் செல்லுதல் தொடர்பான ஒருங்கிணைப்பு மற்றும்முகாமைத்துவம் போன்றவை எல்லாம் பஸில்தலைமையிலானஇந்தச்செயலணியிடம். நாட்டில் இனி என்ன மிச்சமிருக்கின்றது பஸில்தலையிடாமல் - கையாளாமல் - கையாடாமல் - விடுவதற்கு?

கல்வி, மீன்பிடித்துறைகள் பற்றி நேரடியாகக் குறிப்பிடாவிட்டாலும்தேசியஒருங்கிணைப்பு என்ற பெயரில் அவையும் பஸிலின் கட்டுக்குள்தான்.

'கொரோனா'என்றக்கொடூரப் பேரரக்கனின்அச்சத்தில் நாடே மூழ்கியிருக்க,

சத்தம்சந்தடியின்றி'கொரொனா கொண்டரோல் படையணி' என்ற பெயரில் நாட்டின்தேசிய சுகாதாரமும், வளமும் கண்காணிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. அந்தப் பெயரில் 'சுவாஹா' போடப்படப் போகின்றது.

'மிஸ்டர்டென்பெர்சண்ட்' பழைய படி - 2015.இற்கு முற்பட்ட நிலைவரப்படி - தன் கைவரிசையைக் காட்ட மீள விஸ்வரூபம் எடுத்து வந்துவிட்டார். மக்களைச்சூறையாடுவதில் அவரின் வல்லமை உலகப்புகழ்வாய்ந்தது. கொரோனாப் பீதி என்ற மறைப்பில் அந்தக் கொள்கை சத்தம் சந்தடியின்றி தன் கைவரிசையைக் காட்டியபடி முன்னேறும்...!

**- மின்னல் -**

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பரம்பலைக்கட்டுப்படுத்தயாழ். குடாநாட்டில்கடந்தசெவ்வாய் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்கு மறு அறிவித்தல் வரை நீடிக்கப்பட்டுள்ளதால் பொது மக்கள் வீதிகளுக்கு வருவதைத்தடுப்பதற்கு இந்தச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலாளர் க.மகேசன், யாழ்ப்பாணம் பிரதேசசெயலாளர்எஸ்.சுதர்சன் மற்றும் யாழ்.வணிகர் கழக நிர்வாகத்தினரின்தொடர்ச்சியான முயற்சியால்மாவட்டமக்களின் தற்போதைய சூழலுக்கு ஏற்ப உலர் உணவுப் பொருள்கள் மற்றும் மருந்து வகைகள் வர்த்தக நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்படவுள்ளன.

முடிந்தளவுக்கு தங்களது வீடுகளில்இருந்தவாறேதொலைபேசி அழைப்புக்களூடாகப் பொருள்களைக் கொள்வனவு செய்து நம் சமூகத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி உதவுமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொள்கிறோம் என்று மாவட்ட செயலாளர்மற்றும்யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் ஆகியோர் கேட்டுள்ளனர். (ஐ)

**உலர் உணவு பொருட்கள் மற்றும் மருந்து வகைகளை வீடுகளுக்கு விநியோகிக்ககூடிய நிறுவனங்களின் விபரங்கள்**

| இல | நிறுவனத்தின் பெயர் | முகவரி | தொடர்பு இல. | விநியோகிக்கவுள்ள பொருட்களின் விபரம் |
|---|---|---|---|---|
| 1 | ஜெகன் களஞ்சியம் | 477, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். | 0212225035<br>0774836923 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்கு பொருட்கள் |
| 2 | ஜித் பூட்சிட்டி | 127, கண்டி வீதி, யாழ்ப்பாணம். | 0212221848<br>0772867561 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்கு பொருட்கள் |
| 3 | நோத்வே பூட்சிட்டி | 184, பலாலி வீதி, திருநெல்வேலி | 0212226002 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்கு பொருட்கள் |
| 4 | சிவன் ஸ்ரோர்ஸ் | பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி | 0212228180<br>0778558761<br>0774329975 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்கு பொருட்கள் |
| 5 | குகன் ஸ்ரோர்ஸ் (Pvt) Ltd. | 180, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். | 0773921662 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்கு பொருட்கள் |
| 6 | ஸ்ரார் பூட் ஸ்ரோர் | 34, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில் | 0774042528<br>0777667457<br>0767845769 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்கு பொருட்கள் |
| 7 | சிறிரங்கன் என்ரபிறைஸ் | 370, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். | 0212222027<br>0777863024 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்கு பொருட்கள் |
| 8 | அம்பாள் ரேடர்ஸ் | 324, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | 0212224103<br>0774607920 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்கு பொருட்கள் |
| 9 | தேனு சுப்பர் மார்ட் | 51, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி | 0770812832<br>0777110075 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்கு பொருட்கள் |
| 10 | ரி.சி.ரி பல்பொருள் வாணிபம் | 527, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | 0212219813<br>0769699957 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்கு பொருட்கள் |
| 11 | யாழ் வைத்தியசாலை | 315, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி | 0212223533<br>0773107685 | மருந்துப் பொருட்கள் |
| 12 | இரட்ணம் மருந்தகம் | 384, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம் | 0212222667<br>0760586050<br>0773069506 | மருந்துப் பொருட்கள் |
| 13 | சிற்றி மெடிக்கல் கெயார் | 558, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம் | 0778511874 | மருந்துப் பொருட்கள் |
| 14 | ஜெகன் பார்மசி | 462, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | 0779261780<br>0777283794<br>0212223191<br>0212224336 | மருந்துப் பொருட்கள் |

**உலர் உணவு பொருட்கள் மற்றும் மருந்து வகைகளை வர்த்தக ஸ்தாபனங்களுக்கு விநியோகிக்க உள்ள நிறுவனங்களின் விபரங்கள்**

| இல | நிறுவனத்தின் பெயர் | முகவரி | தொடர்பு இல. | விநியோகிக்க உள்ள பொருட்களின் விபரம் |
|---|---|---|---|---|
| 1 | வேணி களஞ்சியம் | 165, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் | 0779082146<br>0771611865 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்கு பொருட்கள் |
| 2 | க.கு.கந்தையாபிள்ளை | 318, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | 0777866527 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்கு பொருட்கள் |
| 3 | விநாயகர் ஸ்ரோர்ஸ் | 144/3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் | 0772306727<br>0774347367 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்கு பொருட்கள் |
| 4 | நியூ ஸ்ரீ கண்ணன் | 1, பலாலி வீதி, திருநெல்வேலி | 0777769231<br>0772784004 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்கு பொருட்கள் |
| 5 | ரூபா வேர்ஸடைல் ரேடர்ஸ் | 104, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | 0212228330 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்கு பொருட்கள் |
| 6 | தேனு களஞ்சியம் | 29, புதிய சந்தை வீதி, திருநெல்வேலி. | 0777060057<br>0777110075<br>0778893755 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்கு பொருட்கள் |
| 7 | பி.பி.ரி ரேடர்ஸ் (P.P.T) | 183, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் | 0212228829<br>0212228881 | உணவுப் பொருட்கள் மற்றும் பலசரக்கு பொருட்கள் |
| 8 | ரூபா வேர்ஸடைல் ரேடர்ஸ் | 154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் | 0212226809<br>0759283812 | மருந்துப் பொருட்கள் |
| 9 | ஜெகன் பார்மசி | 462, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | 0779261780<br>0777283794<br>0212223191<br>0212224336 | சிறுவர்களுக்கான பால்மா மற்றும் உணவு வகை |

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வதற்காகஜனாதிபதி செயலகத்தின் மக்கள் தொடர்பாடல் பிரிவை 24 மணி நேரமும் திறந்துவைப்பதற்குநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் நியமிக்கும் உத்தரவுகள் நடைமுறைப்படுத்தப்படுவதில் ஏமாற்றமடையும் மக்கள், தாம்எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் தொடர்பில் 011-2354550 / 0112354655 என்ற இலக்கங்களின் ஊடாக முறைப்பாடு செய்ய முடியும் என தெரிவிக்கப்படுகின்றது

## 4 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதையடுத்து கொரோனா தொற்றிலிருந்து மொத்தம் 7 பேர் குணமடைந்துள்ளனர்.

இதனால்இப்போதுகொரோனா தொற்று (Active) இருப்போர் எண்ணிக்கை95ஆககுறைந்துள்ளது. இதேவேளை 225 பேர் கொரோனாசந்தேகத்தில் கண்காணிக்கப்படுகின்றனர். (ஐ)

## அரச துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் கொரோனா வரைஸ் தொற்று பரவலைக் கட்டுப்படுத்த நாடு முழுவதும் ஊரடங்கு சட்டத்தால் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய அரசதுறைகள் முடங்கிப்போயுள்ளன.

இந்த நிலையில் அரசதுறை உத்தியோகத்தர்களது ஏப்ரல் மாதச் சம்பளம் எதிர்வரும் 10ஆம்திகதிக்குமுன்னர்வழங்குவதற்குஉரியநடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதுஎன்றுதிறைசேரியின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## குற்றவாளிக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மிருசுவில்படுகொலைகுற்றவாளியெனஉயர்நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டசுனில்ரத்னாயக்க எனும்இராணுவலான்ஸ்கோப்ரல் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

எந்தவொரு ஜனாதிபதி பொதுமன்னிப்பும்எம்முடைய சமூக நீதி, நல்லிணக்கம் மற்றும் ஆழமான ஜனநாயகத்தை முன்னேற்றுவதற்காகவே இருக்க வேண்டும். இதனை உறுதிப்படுத்துவது ஜனாதிபதியைசுற்றியுள்ளஆலோசகர்களின் தார்மீகப் பொறுப்பாகும் எனவும் அவர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

## பொலிஸாரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பணித்துள்ளார்.

இந்தத் தகவலை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

நாட்டில்கோரோனாதொற்று பரம்பலைக்கட்டுப்படுத்தஅரசு முன்னெடுத்துவரும்பணிகளில் பொலிஸாரின் சேவை மிக அத்தியாவசியமாகக்காணப்படுவதால்அனைத்து தர பொலிஸ் உத்தியோகத்தர்களின் விடுப்புக்கான அனுமதியை இடைநிறுத்துமாறு பதில் பொலிஸ் மா அதிபர், மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (ஐ)

## ஓய்வூதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்றுநிதிஅமைச்சுஅறிவித்துள்ளது.

இது தொடர்பில் உரிய அறிவுறுத்தல்கள்சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக திறைசேரியின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

## 106 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால்பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை106ஆக(ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப்பெண்உட்பட) அதிகரித்துள்ளது. அவர்களில் 6பேர்முழுமையாகச்சுகமடைந்துவீடுதிரும்பியுள்ளனர்.

நாட்டில்கோரோனாதொற்று அறிகுறி உள்ளவர்கள் 237 பேர் வைத்தியசாலைகளில்கண்காணிக்கப்படுகின்றனர். (ஐ)

## வடக்கிலே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சிச்சபை உறுப்பினர்கள்தமது மாதாந்தக் கொடுப்பனவை ஒதுக்கீடு செய்து வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு உதவித் திட்டங்களை வழங்கத் தீர்மானித்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மாவை சேனாதிராசா மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாணத்தில்தற்போது தொடர்ச்சியாக ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் நாளாந்த தொழில் செய்து வாழ்வாதாரத்தை நிறைவு செய்யும்குடும்பங்களைச்சேர்ந்தோர் பெரிதும்பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கான உதவித் திட்டங்கள் தொடர்பில் முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன் மற்றும் நானும் ஆராய்ந்தோம்.

அதனடிப்படையில்உள்ளூராட்சிச்சபைகள் ஏற்பாட்டில் குறிப்பிட்டுள்ளவாறு சபை நிதியை ஒதுக்கீடு செய்து செய்து ஊரடங்குவேளையில் தொழிலிழந்து வீடுகளில் இருக்கும் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு உதவிப் பொருள்களை வழங்குவதற்குத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாணஆளுநர், உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருடன் நான்கலந்துரையாடியமையை அடுத்து அவர்கள் இதற்கான அனுமதியைத் தாமதமின்றி வழங்க இணக்கம் தெரிவித்துள்ளனர்.

எனவே இந்தத்தீர்மானத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையின் கீழ் உள்ள மாநகர சபை, நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் தவிசாளர்கள் நடைமுறைப்படுத்துவார்கள்.

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் தமது மாதாந்தசம்பளக்கொடுப்பனவை ஒதுக்கீடு செய்து வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு உதவித்திட்டங்களைவழங்குவதற்கும் தீர்மானித்துள்ளனர். இதற்கான பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ஐ-07)

## மரக்கறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்துள்ளார்.

உள்ளூர்உற்பத்திப்பொருட்களைச் சந்தைப்படுத்துவது தொடர்பிலானகூட்டமொன்று நேற்று வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதுகுறித்துஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த மாவட்ட செயலாளர் க.விமலநாதன், சுகாதார நடவடிக்கையின் பொருட்டு, எமது மாவட்டத்தின் உற்பத்திகளை எமது மாவட்டத்திற்குள்ளேயே பகிர வேண்டும் எனத் தீர்மானித்துள்ளோம்.

போக்குவரத்து ஊடாக பிற மாவட்டங்களுக்குச் சென்று வருகின்றபோது கொரோனா வைரஸ்தொற்றக்கூடிய வாய்ப்புக்கள்இருப்பதனால்இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.மூன்று பிரிவுகளூடாக மட்டுப்படுத்திய அளவில் மீன்பிடி நடவடிக்கைகளைமேற்கொள்வது எனத் தீர்மானித்திருந்தோம்.

அவ்வாறுபிடிக்கப்படுகின்ற மீன்களை வியாபாரிகளூடாக வாகனத்தின் மூலம் எடுத்து வரப்பட்டு பிரதேச செயலக ரீதியில்அல்லது கிராம மட்டங்களில் இருக்கின்ற சிறிய வியாபரக் குழுக்களுக்கு வழங்குவதெனவும், அந்த வியாபாரக் குழுக்கள் கிராமங்களுக்குள் சென்று மீனை குறிப்பிட்ட நிர்ணயிக்கப்பட்ட விலையில் சந்தைப்படுத்துவதென முடிவெடுத்துள்ளோம்.

நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஊடாக கணக்கிட்டு, உரிய விலை நிர்ணயத்தினைவழங்குமாறும் கோரியிருக்கின்றோம்.

அதேபோல்விவசாயச்செய்கைகளிலும்,எமதுமாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற மரக்கறிவகைகளை எமது மாவட்டத்திற்குள்ளேயே சந்தைப்படுத்துவதென முடிவெடுத்துள்ளோம்.

எமது மாவட்டத்திலும் ஒரு சில பகுதிகளிலேயே அதிகமான விவசாய மற்றும் மரக்கறிச் செய்கைகள் அதிகமாக இருக்கின்றன. பல பிரதேசங்களில் மரக்கறிச் செய்கைகள் இல்லாமலே காணப்படுகின்றன.

மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றமரக்கறிகளை, மரக்கறித் தேவையுள்ள பகுதிகளுக்கு, இனங்காணப்பட்ட வியாபாரிகளூடாக கிராமங்களுக்குள் வீடுவீடாகச்சென்று மரக்கறிகளைச் சந்தைப்படுத்துவதெனத் தீர்மானித்துள்ளோம். - என்றார்.

# இரண்டு வாரங்களுக்கு சுயகட்டுப்பாட்டுடன் செயற்பட வடக்கு மக்களுக்கு விஜயகலா மகேஸ்வரன் அழைப்பு

யழ்ப்பாணம்,மார்ச்26

இரண்டு வாரங்களுக்கு மக்கள் சுய கட்டுப்பாடு செயற்பட வேண்டுமென முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது கொரோனா வைரஸின் தாக்கமானது உலகளாவிய ரீதியில் பாரியளவு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையிலும் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் வைரஸ் தாக்கத்திற்கு உள்ளாகி உள்ளார்கள். வடக்கை பொறுத்தவரைக்கும் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதி. இது ஏற்கனவே பாதிக்கப்பட்ட பிரதேசம். எனவே இந்த கொரோனா வைரஸ் தொற்று வடபகுதியில் தாக்கத்தை ஏற்படுத்துமேயானால் மீண்டும் தமிழினம் பாரிய அழிவினை சந்திக்க நேரிடும். ஆகவே, வடக்கு மக்கள் விழிப்பாக செயற்பட வேண்டும். எதிர்வரும் இரண்டு கிழமைகளுக்கு தொடர்ச்சியான ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட உள்ளதாக ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கை பொறுத்தவரை பொது மக்கள் அன்றாடக் கடமைகளை சுய கட்டுப்பாடுடன் மேற்கொள்வதன்



மூலம் வைரஸில் இருந்து நம்மை காப்பாற்றிக் கொள்ள முடியும். அத்தோடு உலக நாடுகளில் வல்லரசு நாடுகளில் கூட இந்த கொரோனா வைரஸ் பாரியஅளவு தாக்கத்தை செலுத்தியுள்ளது.

எனவே, வடக்கு மக்கள் இதனைக் கருத்தில் கொண்டு சுயகட்டுப்பாட்டுடன் வீடுகளில் இருந்து தங்கள் கடமைகளைச் செய்ய வேண்டும். பொதுவாக வெளியில் நடமாடும் போது கட்டாயமாக 'மாஸ்க்' அணிந்து செல்லுங்கள். அத்தோடு தற்பொழுது அன்றாட வாழ்க்கைக்கு தேவையான பொருள்கள் அனைத்தும் உங்கள் வீடுகளைத் தேடி வர உள்ளன. எனவே நீங்கள் வெளியே செல்ல வேண்டிய தேவை இல்லை. அநாவசியமான வேலைகளைத் தவிர்த்து, சுய கட்டுப்பாடுடன் செயற்பட்டு கொள்வதன் மூலம் நாம் வைரஸில் இருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும்.

அரசாங்கத்தினால் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளன என ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்டுள்ளது. வடக்கில் ஏற்கனவே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நாம் மீண்டும் கொரோனாவுக்குப் பலியாவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு, நாம் அனைவரும் சுயகட்டுப்பாட்டுடன் செயற்பட வேண்டும். ஊரடங்கு தளர்த்தப்பட்ட வேளையிலும் நாம் ஒன்றுகூடிப் பொருள்களை வாங்குவதிலும் அவதானமாக இருக்க வேண்டும். எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வீட்டிலிருந்து வேலை செய்யும் காலம் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 27

தற்போது நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் மார்ச் மாதம் 30ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி வரையான காலப்பகுதியை வீட்டிலிந்து வேலை செய்யும் காலம் என அரசு அறிவித்துள்ளது.

அத்தியாவசிய சேவை தவிர்ந்த அரச, தனியார் துறையினருக்கே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## யாழ். ஆஸ்பத்திரி கிளினிக் நோயாளர்களுக்கு மருந்துகள் அவர்களுக்குக் கிட்ட உள்ள அரச ஆஸ்பத்திரிகள் மூலம்!

### பணிப்பாளர் சத்தியமூர்த்தி ஏற்பாடு; இன்று தீவகப் பகுதிக்கு!



யாழ்ப்பாணம்,மார்ச்.27

தற்போது தொடர் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படுவதால் யாழ் போதனா வைத்தியசாலையில் மருத்துவக் கிளினிக்கில் சிகிச்சை பெறுகின்றவர்களுக்கான மருந்துகளை அவர்களைத் தேடிச் சென்று அவர்களுக்கு அருகில் உள்ள அரச வைத்தியசாலைகளில் ஒன்றில் வைத்து வழங்குவதற்கான விசேட திட்டம் ஒன்றை யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி அறிமுகப்படுத்தியுள்ளார்.

இதன்படி முதல் கட்டமாக இன்று தீவகப் பகுதிகளைச் சேர்ந்த நோயாளர்களுக்கு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இது தொடர்பில் தீவகப் பகுதிகளைச் சேர்ந்த நோயாளர்களுக்கு வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்தலொன்றை விடுத்துள்ளார். அதில் அவர் தெரிவிதுள்ளவை வருமாறு:-

"கொரோனாத் தொற்று தாக்கம் காரணமாக ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளதால் நோயாளர் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக மருத்துவ கிளினிக்கில் சிகிச்சை பெறுகின்றவர்கள் எதிர்நோக்கும் பாதிப்பையடுத்து யாழ் போதனா வைத்தியசாலை நிர்வாகம் முக்கிய நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய இன்று 27 ஆம் திகதி தீவகத்தைச் சேர்ந்த – மருத்துவ கிளினிக் சேவையைப் பெறும் – நோயாளர்களுக்கு மருந்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய சம்பந்தப்பட்ட தீவக நோயாளர்களை நாளை காலை 9 மணிமுதல் 1 மணி வரையிலான நேரத்திற்குள் 021 - 2222268 என்ற தொலை பேசி இலக்கத்திற்கு அழைத்து விவரங்களைத் தெரிவிக்குமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார்.

அவ்வாறு தெரிவிக்குமிடத்தே உங்களுக்கு தேவையான மருந்துகள் உங்களது பிரதேசத்திற்கு அருகிலுள்ள அரச வைத்தியசாலைகளுக்கு பொதி செய்து அனுப்பி வைக்கப்படும்." – என்று பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

இன்று தீவகப் பிரதேசத்திற்காக முதலில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள இந்த நடவடிக்கை தொடர்ந்தும் ஏனைய பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கப்பட உள்ளதாகவும் அது தொடர்பான அறிவித்தல்கள் பின்னர் வெளியிடப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அத்தியாவசிய மருந்துப் பொருள்களை தடையின்றி விநியோகிக்க ஏற்பாடாம்!

### கொழும்புக் கூட்டத்தின் பின்னர் தீர்க்கமான அறிவிப்புகள்

கோவிட் 19 வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்காக ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள காலப் பகுதியில் மக்கள் தமது அத்தியாவசியமான மருந்துப் பொருள்களைச் சிரமமின்றி பெற்றுக்கொள்ளும் முறைமையொன்றைத் தயாரிப்பது தொடர்பாக அரசாங்கம் கவனஞ் செலுத்தியுள்ளது. அதற்கான திட்டமும் தயார் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிததமர் மஹிந்த ரஜபக்ஷவின் அலுவலகம் விடுத்த செய்திக் குறிப்பிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த செய்திக் குறிப்பின் முழு விவரமும் வருமாறு:-

அத்தியாவசிய பொதுச் சேவைகளைத் தொடர்ச்சியாக வழங்குதல், வழிநடாத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் பின் தொடர் நடவடிக்கைகளுக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர், முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் மருந்துத்துறை சார்ந்த அதிகாரிகளின் பங்கேற்புடன் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இது தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

நீரிழிவு, இரத்த அழுத்தம் உள்ளிட்ட ஏனைய தொற்றா நோய்களுக்காகச் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு ஊரடங்குச் சட்டம் காரணமாக மருந்துகளைக் கொள்வனவு செய்வதில் சிரமமான நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது.

அந்தப் பிரச்சினைக்குத் துரிதமான தீர்வினைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் இந்த கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின்படி இடம்பெற்ற இக்கலந்துரையாடலின்போது, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மருந்துப் பொருள்களின் இருப்பு எதிர்வரும் மாதங்களுக்குப் போதுமான அளவுக்கு மருந்துக் களஞ்சியங்களில் காணப்படுகின்றன எனத் தெரிய வந்தது.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மருந்துப் பொருள்களைத் தொடர்ச்சியாக உற்பத்தி செய்வதில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

உள்நாட்டு மருந்துப் பொருள் உற்பத்தியின் பிரச்சினைகளைத் தீர்த்து, மருந்துப் பொருள் உற்பத்தியைத் தொடர்ச்சியாக மேற்கொள்வது தொடர்பாகவும் இதன்போது கவனஞ் செலுத்தப்பட்டது.

தற்போது நாட்டில் காணப்படும் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துப் பொருள்களின் இருப்பு தொடர்பாகவும், இக்கலந்துரையாடலில் கவனஞ் செலுத்தப்பட்டது. அத்தியாவசிய மருந்துப் பொருள்களைத் தட்டுப்பாடின்றி வழங்குவதற்கான இயலுமை காணப்படுவதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவிலிருந்து மருந்துப் பொருள்களை



இறக்குமதி செய்வதில் சிக்கல்கள் காணப்படுவதாக இதன்போது மருந்துப்பொருள் இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டியமையுடன், அது தொடர்பாக அரசின் தலையீடு அவசியம் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இச்சந்தர்ப்பத்தில் இந்திய அரசாங்கத்தின் சுகாதார அதிகாரிகளுடன் தொலைபேசி ஊடாகக் கலந்துரையாடிய பசில் ராஜபக்ஷ மருந்துப் பொருள்களின் இறக்குமதி தொடர்பான சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டார்.

அரச வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்படும் மருத்துவ உபகரணங்களில் கோளாறுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் இலவசமாகவும், மிகவும் விரைவாகவும் அந்தக் கோளாறுகளை நிவர்த்தி செய்து மருத்துவ உபகரணங்களை இயல்பு நிலைக்கு மாற்றுவதற்கு மருத்துவ உபகரணப் பொறியியலாளர் சங்கத்தினர் தமது உதவியை வழங்க இதன்போது இணக்கம் தெரிவித்தனர்.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னெடுத்துச் செல்லப்படும் வேலைத்திட்டத்தின் மத்தியில் ஏனைய நோய்களுக்குச் சிகிச்சை பெறும் நோயாளிகளையும் கவனித்துப் பராமரிப்பது பொறுப்பான அரசாங்கத்தின் கடமையாகும் என இதன்போது பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜயசிங்க, சுகாதார மற்றும் தேசிய மருத்துவச் சேவைகள் மேலதிக செயலாளர் (மருத்துவ வழங்கல்) சுனில் த அல்விஸ் மற்றும் மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, இலங்கை மருந்துகள் வணிகசபை, இலங்கை மருத்துவ உபகரணங்கள் கைத்தொழில் சபை, அகில இலங்கை மருந்தக உரிமையாளர்களின் சங்கம், இலங்கை மருந்து வியாபாரிகளின் சங்கம் உள்ளிட்ட மருந்துப் பொருள்கள் உற்பத்தி மற்றும் வழங்கல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# நமது பார்வை



உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

## கொழும்பின் கொடூரப் போக்கை முரசறையும் மன்னிப்பு விடுதலை

**மிருசுவிலில் எட்டுத் தமிழர்களைப் படுகொலை செய்த குற்றத்துக்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ அதிகாரி ரத்நாயக்கா இன்று சுதந்திர மனிதர்.**

**மூன்று நீதிபதிகளைக் கொண்ட 'ட்ரயல்' அட்பர்' நீதிமன்றத்தினால் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டு அவருக்கு மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது.**

**2000ஆம் ஆண்டு டிசெம்பர் 19ஆம் திகதி, இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந்த மிருசுவில் பிரதேசத்தில் தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற எட்டு அப்பாவிப் பொதுமக்கள் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்டு, மலசல கூடக் குழிக்குள் சமாதியாக்கப்பட்டனர். அந்தக் கொடூரத்தின் அருந்தப்பில் தப்பிய மகேஸ்வரன் என்ற இளைஞரின் சாட்சியத்தின் அடிப்படையில் உண்மைகள் அம்பலமாகின.**

**இந்த வழக்கில் ஐந்து சிப்பாய்கள் மீது குற்றம் சுமத்தப்பட்ட போதிலும், மகேஸ்வரனினால் மற்றைய சிப்பாய்கள் சரியாக அடையாளம் காட்டப்படாத பின்புலத்தில், லான்ஸ் கோப்ரல் ரத்நாயக்கா மட்டுமே 'ட்ரயல் அட் பார்' மன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டார். ஏனைய நால்வரும் போதிய ஆதாரமின்மையால் விடுவிக்கப்பட்டனர். அந்தத் தீர்ப்பு 2015 ஜூன் 25 ஆம் திகதி வழங்கப்பட்டது.**

**இந்தத் தீர்ப்புக்கு எதிராக லான்ஸ் கோப்ரல் ரத்நாயக்கா சார்பில் உயர் நீதிமன்றத்தில் ஐந்து நீதியரசர்கள் கொண்ட ஆயத்திடம் மேன்முறையீடு செய்யப்பட்டது.**

**ஐந்து நீதியரசர்களைக் கொண்ட ஆயத்தின் முன்னால் 2018 செப்டெம்பர், ஒக்டேபர் மாதங்களில் விசாரணைகள் நடைபெற்றன. 2019 ஏப்பர் 25ஆம் திகதி பிரதம நீதியரசர் எச்.என்.ஜே.பெரேரா உட்பட ஐந்து நீதியரசர்கள் 'ட்ரயல் அட் பார்' வழங்கிய மரண தண்டனைத் தீர்ப்பை ஏகமனதாக உறுதிப்படுத்தித் தமது தீர்ப்பை அளித்தனர்.**

**அவ்வாறு எட்டுத் தமிழர்களை சுட்டும் வெட்டியும் படுகொலை செய்தவர் என மூன்று நீதிபதிகளை கொண்ட மேல் நீதிமன்ற ஆயத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டு, மரணதண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்ற ஆயத்தினால் அந்தத் தீர்ப்பு முற்றிலும் சரியானதே என்று ஏகமனதாக உறுதிப்படுத்தப்பட்ட நிலையிலேயே, அந்தக் கொடூரக் குற்றம் இழைத்தவருக்கு முன்னாள் இராணுவ அதிகாரியான கோட்டாபய ராஜபக்ஷ வினால் இப்போது பொது மன்னிப்பும் விடுதலையும் அளிக்கப்பட்டிருக்கின்றது.**

**தற்போதைய பாதுகாப்புச் செயலாளரும் மற்றொரு முன்னாள் மூத்த இராணுவ அதிகாரியுமான மேஜர் ஜெனரல் கமல் குணரட்ன தாமே நேரடியாகச் சிறைச்சாலைக்குச் சென்று, மேற்படி ரத்நாயக்காவின் விடுதலையை உறுதி செய்து, அங்கிருந்து அனுப்பி வைத்திருக்கின்றார்.**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் சுட்டிக்காட்டியமை போன்று இந்த மன்னிப்புத் தொடர்பான விவகாரத்தில் பின்வரும் விடயங்கள் நோக்கத் தக்கவை:–**

*** தமிழர்களுக்கு எதிராக இராணுவத் தரப்பில் இது போன்ற பல்லாயிரம் கொடூரங்கள் புரியப்பட்ட போதிலும் அவை எவற்றுக்கும் யாரையும் பொறுப்புக் கூறும் வகையில் வழக்குகள் தொடுக்கப்படக் கூடவில்லை.**

*** தொடுக்கப்பட்ட ஒரு சில வழக்குகளும் கூட முறையாக நடத்தப்படவில்லை.**

*** அல்லது மேன்முறையீட்டில் குற்றம் சுமத்தப்பட்டவர் தப்பிப் போக இடமளிக்கப்பட்டது.**

*** இந்த வழக்கில்தான் மேல்நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளும், மேன்முறையீட்டில் உயர்நீதிமன்றத்தின் ஐந்து நீதியரசர்களும் ஏகமனதாகக் குற்றவாளி மீதான குற்றத்தை உறுதிப்படுத்தி நின்றனர். அந்தக் குற்றவாளியும் கூட சட்டத்தின் ஆட்சியையும் மீறி பின்கதவால் விடுதலையாகி சுதந்திர மனிதராகி விட்டார்.**

*** ராஜபக்ஷக்களின் ஆட்சியின் கீழ் தமிழர்களுக்கு எதிராகக் குற்றம் புரிந்தனர் என்ற தவறுக்காக எந்தப் படையினர் மீது பொறுப்புக் கூறல் சுமத்தப்பட மாட்டாது, அவர்கள் புரிந்த குற்றங்கள் எதற்கும் தண்டனை இல்லை என்ற 'அரச நிலைப்பாடு' மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.**

*** சர்வதேச சமூகமே கொரோனா பீதியில் உறைந்து கிடக்க இந்த மன் னிப்பு நாடகம் சத்தம் சந்தடியின்றி அரங்கேறியிருக்கின்றது. சர்வதேச கண்டனங்களை தவிர்ப்பதற்கு இந்த சமய சந்தர்ப்பம் பொருத்தமானது என்று 'கோட்டாபய அண்ட் கோ' தீர்மானித்திருக்கும் போல.**

*** இலங்கையில் இராணுவத்தினருக்கு எதிரான பொறுப்புக்கூறல் முறைமை கிஞ்சித்தும் நடைமுறைப்படுத்தப்பட மாட்டது என்பது மீண்டும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.**

*** மனிதாபிமானத்திலும் பாரபட்சம் – பரிதாபத்திலும் பாகுபாடு – என்பதும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. எட்டுத் தமிழர்களை சுட்டும், வெட்டியும் கொன்றவருக்குப் பொதுமன்னிப்பு. தம் இனத்துக்காப் போராடிய சுதந்திரப் போராளிகளுக்கு கொடூர – சட்ட ரீதியில் மிருகத்தனமான – பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் மிக மிக மோசமான தண்டனைகள். அவற்றில் அழுந்தி அந்த அரசியல் கைதிகள் சாக வேண்டும் என்பது அவர்கள் தொடர்பில் அரசின் முடிவு.**

**இலங்கையின் நீதி, சட்டத்துறையின் மாண்புக்கே உலை வைக்கும் தீர்மானத்தை எதேச்சாதிகாரமாக எடுத்து நேற்று செயற்படுத்தியிருக்கின்றார் இலங்கையின் இராணுவப் போக்கு ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ.**

**இந்தக் கொடூரப் போக்கின் விளைவுகளை இலங்கை நாடு எதிர்கொண்டு அனுபவிப்பதற்கு அதிக நாள்கள் பிடிக்கா. அதுவரைப் பொறுத்திருப்போம்!**

# 4 முகாம்களில் இருந்து நேற்று 615 பேர் விடுவிப்பு

இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கொரோனா தனிமைப்படுத்தலுக்கான நான்கு முகாம்களில் இருந்து நேற்று 615 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என இலங்கை இராணுவ தடுப்பு மருந்து சேவை பொது சுகாதார நிபுணத்துவ துணை இயக்குநர் வைத்தியர் கேணல் சவீன் சேமகே தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் புனாணை, மட்டக்களப்பு பல்கலைக் கழகம் மற்றும் மீயான்குளம் இராணுவ முகாம் ஆகிய கொரோனா தடுப்பு முகாம்களில் கடந்த 14 நாள்களாகத் தடுத்து வைக்கப்பட்டு மருத்துவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டவர்கள் எவ்விதமான நோய்த் தொற்றும் இல்லாத நிலையில் தங்களின் குடும்பங்களுடன் இணைக்கும் பணி நேற்று இடம் பெற்ற போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வெளிநாடுகளில் இருந்து வருகை தந்த இலங்கை மக்களை கொரோனா வைரஸ் தாக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் கொரோனா தனிமைப்படுத்தல் முகாம்களில் வைத்து சிகிச்சைகளை அரசாங்கம் வழங்கி வருகின்றது.

இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கொரோனா தனிமைப்படுத்தல் நான்கு முகாம்களில் இருந்து 615 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு கொரோனா தடுப்பு முகாமில் உள்ளவர்களுக்கு பரிசோதனைகள் இடம்பெற்று வரும் நிலையில் இன்னும் 33 நாள்களின் பின்னர் அனைவருரையும் தங்களின் குடும்பங்களுடன் இணைக்கும் பணி இடம்பெறும்.

கொரோனா தடுப்பு தனிமைப் படுத்தல் முகாமில் உள்ளவர்களை சிறந்த முறையில் கவனித்து பரிசோதனைகள், சிகிச்சைகள் அழிக்கப்பட்டு வரும் நிலையில் இலங்கையில் எவருக்கும் கொரோனா வைரஸ் தாக்கம் இல்லை என்பதை அவதானிக்க முடிகின்றது.

கொரோனா தடுப்பு தனிமைப் படுத்தல் முகாமில் உள்ளவர்கள் 14 நாள்கள் மருத்துவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டு திருப்தி இன்மை ஏற்பட்டால் மீண்டும் ஐந்து நாள்கள் அனுமதிக்கப்பட்டு மருத்துவ பரிசோதனைகள் இடம்பெறும். அத்தோடு சுகாதார திணைக்களத்தின் நேரடிக் கண்காணிப்பின் பின்னர் மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட்டவர்கள் 14 நாள்களுக்குப் பின்னர் விடுவிப்பு செய்யப்படுகின்றனர்.

புனாணை மட்டக்களப்பு பல்கலைக் கழக கொரோனா தடுப்பு முகாமில் இருந்து நான்கு பஸ்கள் மூலமாக 125 பேரும், மியான்குளம் இராணுவ தடுப்பு முகாமின் கொரோனா தடுப்பு முகாமில் இருந்து ஒரு பஸ் மூலமாக 18 பேருமாக 143 பேர் நேற்றுக் காலை 08.00 மணியளவில் நித்தம்புவ, கொழும்பு, குருநாகல், காலி, மாத்தறை போன்ற பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

எனவே கொரோனா வைரஸின் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வரும் நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். – என்றார்.

# வெளிநாட்டுப் பயணிகள் 18ஆயிரத்து 93 பேரையும் வெளியேற்றும் நடவடிக்கை

*இலங்கையில் தங்கியிருக்கும் 18 ஆயிரத்து 93 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை அவர்களின் சொந்த நாடுகளுக்கு அனுப்பி வைக்கும் பணிகளை இலங்கை சுற்றுலாத் துறை மேற்கொண்டுள்ளது.*

*அதன்படி, விமான நிலையத்திற்கு செல்வதற்கு போக்குவரத்து வசதிகள் இல்லாத வெளிநாட்டு பயணிகள் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது 1912 என்ற அழைப்பேசி இலக்கத்திற்கு அழைத்தோ தெரிவிக்குமாறு சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையால் கோரப்பட்டுள்ளது.*

*இவர்களுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, வெளிவிவகார அமைச்சு மற்றும் தொடர்புடைய தூதரகங்களுடன் நெருக்கமாகச் செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.*

*நாட்டிற்கான விமான சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ள போதும் நாட்டில் இருந்து வெளியேறுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

*ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் ஐக்கிய இராச்சியம், மெல்போர்ன் மற்றும் நரிட்டாவுக்கு தினசரி விமானங்களை இயக்குகிறது.*

*இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை எந்வொரு நாட்டுக்கும் அவர்களின் குடிமக்களை திரும்பப்பெறுவதற்கு வசதிகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், கோரிக்கைகளுக்கு ஏற்றவாறு பட்டய விமானங்களுக்கு இடமளிப்பதற்காக ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

## நாளை

**28.03.2020**
**சனிக்கிழமை**

நட்சத்திரம்: பரணி மு.ப 11.23
திதி : சதுர்த்தி மு.இ 10.21 வரை

இராகுகாலம் : 9.13 – 10.43
சுப நேரம் : 3.13 – 4.43

# நிலைகுலைந்தது நியூயோர்க் கொரோனா வைரஸ் தாக்கத்தால்

நியூயோர்க், மார்ச் 27

கொரோனா வைரஸ் தாக்கத்தால் அமெரிக்காவின் முக்கிய நகரமான நியூயோர்க் நிலைகுலைந்து போயுள்ளது என மேயர் பில் டி பிளாசியோ தெரிவித்தார்.

சீனாவில் தோன்றிய கொரோனா வைரசின் தாக்கம் தற்போது உலகையே அச்சுறுத்தி வருகிறது. கொரோனாவால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கையில் இத்தாலி, ஸ்பெயினை தொடர்ந்து அமெரிக்காவும் முன்னணி வரிசையில் உள்ளது.

தற்போதைய நிலவரப்படி அமெரிக்காவில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டியுள்ளது. அங்கு இதுவரை உயிரிழந்தோர் எண்ணிக்கை 1037 ஆக உயர்ந்துள்ளது. மேலும், கொரோனா வைரசால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை அமெரிக்காவில் 68 ஆயிரத்து 203 பேராக அதிகரித்துள்ளது.




இந்த நிலையில், கொரோனா வைரஸ் தாக்கத்தால் அமெரிக்காவின் முக்கிய நகரமான நியூயோர்க் நிலைகுலைந்து போயுள்ளது என மேயர் பில் டி பிளாசியோ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

அமெரிக்காவின் அனைத்து மாகாணங்களிலும் கொரோனா பரவியுள்ளது. குறிப்பாக, நியூயார்க்கில் 30 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கொரோனா பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். இது அமெரிக்காவில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கையில் 40 சதவீதத்துக்கும் அதிகமாகும். நியூயோர்க்கில் உள்ள ஒரு மருத்துவமனையில் மட்டும் ஒரே நாளில் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஜப்பான் நாட்டின் புல்லட் ரெயில் வேகத்தைக் காட்டிலும் அமெரிக்காவின் நியூயார்க் மாகாணத்தில் கொரோனா வைரஸ் பரவிக் கொண்டிருக்கிறது – என தெரிவித்துள்ளார்.

நியூயோர்க் மாநிலத்தில் மொத்தம் 25 ஆயிரத்து 665 பேருக்கு கொரோனா வைரஸ் தாக்கி இருக்கிறது என்று சொன்னால், நியூயோர்க் நகரத்தில் மட்டுமே இந்த எண்ணிக்கை சரிபாதியைக் கடந்து 14 ஆயிரத்து 904 ஆக இருக்கிறது.

# பொதுப் போக்குவரத்து வுகானில் வழமைக்கு!



கொரோனா வைரஸ் முதன் முதலில் கண்டறியப்பட்ட சீனாவின் வுகான் நகரில் 2 மாதங்களுக்குப் பின்னர் புதன்கிழமை பொதுப் போக்குவரத்துக்கள் தொடங்கின. நகரம் இயல்பு நிலை நோக்கித் திரும்பியது.

வுகான் நகரை தலைமை இடமாகக் கொண்ட ஹூபேய் மாகாணத்தில் சுமார் 5.6 கோடி மக்கள் வசிக்கிறார்கள். வுகானில் மட்டும் 1 கோடியே 10 லட்சம் பேர் இருக்கிறார்கள். கொரோனா வைரஸ் தாக்குதலைத் தொடர்ந்து கடந்த 3 மாதங்களாக சீனா முடங்கிப்போனது.

9 வாரங்களாக அங்கு ஊரடங்கு நடைமுறையில் இருந்தது. அடுத்த மாதம் (ஏப்ரல்) 8ஆம் திகதி வரை நீடித்து இருந்த ஊரடங்கு புதன்கிழமை தளர்த்தப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் 23ஆம் திகதிக்குப் பின்னர் புதன்கிழமை வுகான் நகரில் 30 சதவீதம் அதாவது 117 பேருந்துகள் இயக்கப்பட்டன. ஒவ்வொரு பேருந்திலும் ஒரு சுகாதார பாதுகாப்பு கண்காணிப்பாளர் இருந்தார். அவர் பயணிகளை சோதனை செய்த பிறகே பஸ்சில் ஏற அனுமதித்தார்.

கொரோனா வைரஸ் பாதிப்பு இல்லை என்பதை காட்டும்விதமாக ஒவ்வொருவருக்கும் பச்சைநிற சுகாதார அட்டை வழங்கப்பட்டு இருந்தது. ஸ்மார்ட் போன் வைத்து இருந்தவர்கள் அதன்மூலம் அதை காட்டிய பிறகே பஸ்சில் ஏற அனுமதிக்கப்பட்டார்கள். மற்றவர்கள் சுகாதார அட்டையை காண்பித்து பஸ்சில் ஏறினார்கள்.

தற்போது ஹூபேய், உகான் நகரங்களில் புதிதாக யாருக்கும் கொரோனா தாக்குதல் இல்லை என்றும், ஏற்கனவே பாதிக்கப்பட்டு இருந்தவர்களில் 4 பேர் மேலதிகமாக உயிரிழந்து இருக்கின்றனர் எனவும் அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

இதுதவிர வெளிநாடுகளில் இருந்து சீனா சென்ற 47 பேருக்கு கொரோனா அறிகுறிகள் இருப்பது கண்டறியப்பட்டு இருக்கிறது.

# 5 லட்சம் எட்டுகிறது பாதிப்பு

## 22 ஆயிரம் பேர் மரணம்

கட்டுப்பாடின்றித் தொடரும் கொரோனா மரணங்கள் நேற்றிரவு 22 ஆயிரத்தை எட்டின. கிட்டத்தட்ட 5 லட்சம் பேர் இதுவரையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் சீனாவின் வுகான் நகரத்தில் கண்டறியப்பட்ட இந்த வைரஸ் தாக்கம் இப்போது உலக நாடுகள் முழுவதையும் ஆட்டிப் படைத்து வருகின்றது.

நேற்றிரவு வரை 22 ஆயிரத்து 285 பேர் உயிரிழந்திருந்தனர். 4 லட்சத்து 94 ஆயிரத்து 313 பேருக்கு நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது. அவர்களில் ஒரு லட்சத்து 19 ஆயிரம் பேர் மட்டுமே குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

தொற்றுக்குள்ளான 17 ஆயிரத்து 769 பேரின் நிலைமை தொடர்ந்தும் கவலைக்கிடமாகவே உள்ளது. இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் வாய்ப்புக்கள் அதிகமுள்ளன.

இத்தாலியில் ஆகக் கூடுதலாக 7 ஆயிரத்து 503 பேர் உயிரழந்துள்ளனர். அடுத்து ஸ்பெயின் நாட்டில் 4 ஆயிரத்து 145 பேர் உயிரழந்துள்ளனர். சீனாவில் 3 ஆயிரத்து 287 பேர் உயிரிழந்துள்ளனர். ஈரானில் 2 ஆயிரத்து 234 பேரும் அமெரிக்காவில் ஆயிரத்து 37 பேரும் உயிரிழந்துள்ளனர். பிரான்சிலும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 331 ஆக உயர்ந்துள்ளது.

உலக நாடுகள் முழுவதிலும் நேற்றுமட்டும் ஆயிரத்து 7 பேருக்குப் புதிதாக நோய்த் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானில் பாதிக்கப்பட்டோரில் பெரும்பாலானவர்கள் இளைஞர்களே!

பாகிஸ்தானில் கொரோனா பாதிப்பு ஏற்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்கள் என்று அரசு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் கொவிட்-19 பாதிப்புக்கு இதுவரை ஆயிரத்து 93 பேர் உட்பட்டுள்ளனர். 8 பேர் உயிரிழந்துள்ளனர். பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் கொவிட் -19 காய்ச்சலால் மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இங்கு மட்டும் சுமார் 400க்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்

இந்த நிலையில் பாகிஸ்தானில் கொவிட் - 19 காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 1000 பேரில் பெரும்பாலானவர்கள் இளைஞர்கள். அவர்கள் அனைவரும் 21 வயது முதல் 30 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் செயலாளர் சாபர் மிர்சா கூறும்போது, பாகிஸ்தானில் கொவிட் -19 காய்ச்சலால் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பவர்களில் 24% பேர் இளைஞர்கள். ஆனால், பிற நாடுகளில் வயதானவர்களே கொவிட்-19 காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

சீனாவில் 65 வயதுக்கு மேற்பட்டவர்களே அதிகமாக கொவிட் -19 காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், பாகிஸ்தானில் இளைஞர்கள் அதிகம் பாதிக்கப்பட்டு இருப்பது முரணாக உள்ளதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# ரயில் பயணிகளுக்கு முகமூடி தாய்லாந்தில் அரசு உத்தரவு!



ரயில் பயணிகள் அனைவரும் முகக்கவசம் அணிய வேண்டும் என்று தாய்லாந்து அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

ரயில் பயணிகள் அனைவரும் முகக்கவசம் அணிய தாய்லாந்து அரசு உத்தரவு

ஒட்டுமொத்த உலகையும் பெரும் இன்னலுக்குள்ளாக்கி வரும் கொரோனா வைரஸ் பெரிய, சிறிய நாடுகள் என்ற பேதமின்றி அனைத்து நாடுகளிலும் வேகமாக பரவி வருகிறது. தினந்தோறும் ஆயிரக்கணக்கான மரணங்களையும், புதிய நோயாளிகளையும் உருவாக்கி வரும் இந்த வைரஸ் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

இவ்வாறு மிரட்டும் கொரோனாவில் இருந்து தப்புவதற்காக அனைத்து நாடுகளும் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரமாக கடைப்பிடித்து வருகின்றன. பல நாடுகளில் தேசிய ஊரடங்கும், நெருக்கடி நிலையும் கூட பிறப்பிக்கப்பட்டு உள்ளன.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்றான தாய்லாந்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் புதன்கிழமையும் புதிதாக கொரோனா தொற்றுக்கு ஆளாகினர். இதன் மூலம் அங்கு மொத்த எண்ணிக்கை 900ஐ கடந்து விட்டது. 4 பேர் மரணத்தையும் தழுவி விட்டனர். எனவே நாடு முழுவதும் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு உள்ளன.

அந்தவகையில்யில் பயணிகள் அனைவரும் முகக்கவசம் அணிந்துதான் பயணிக்க வேண்டும் என அரசு உத்தரவிட்டு உள்ளது. இதற்காக ரயில் நிலைய வாசல்களில் முகக்கவசம் விற்கப்படும் என அறிவித்துள்ள அரசு, அங்கேயே பயணிகள் தங்கள் உடல் வெப்ப பரிசோதனையையும் மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி உள்ளது.

# தயார் நிலையில் இராணுவம்!

புதுடில்லி, மார்ச் 27

கொரோனா தடுப்பு நடவடிக்கையில் உதவுவதற்கு இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் இராணுவம் மற்றும் விமானப்படையினர் தயார் நிலையில் உள்ளனர்.

கொரோனா தடுப்பு நடவடிக்கையில் மாநில அரசுகளுக்கு அந்தந்த பகுதியில் உள்ள இராணுவங்கள் உதவி செய்ய வேண்டும் என்று மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

அதன்படி அனைத்து மாநிலங்களிலும் இராணுவம் மற்றும் விமானப் படையினர் தயார் நிலையில் உள்ளனர்.

சென்னை தாம்பரம் விமானப் படைத்தளத்தில் ஏற்கனவே கொரோனா நோய் தடுப்பு மையம் உருவாக்கப்பட்டுள்ளது. அங்கு மலேசியாவில் இருந்து ஏர்ஆசியா விமானத்தில் வந்த பயணிகள் தடுத்து வைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

இதேபோல இராணுவ முகாம்கள் உள்ள பகுதிகளில் தடுப்பு முகாம்களை அமைக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. மாநில அரசின் வேண்டுகோளுக்கிணங்கஇ ராணுவத்தினர் செயல்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ஆவடியில் உள்ள ராணுவ ஆடை தயாரிப்பு நிறுவனத்தில் கொரோனா நோயாளிகளுக்கான பாதுகாப்பு உபகரணங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

அங்கு ஒரு லட்சம் முக கவசம் மற்றும் சீருடைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. ராணுவத்தில் உள்ள மருத்துவ பிரிவும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். உடனடியாக சென்று உதவுவதற்கு தயாராக இருக்க வேண்டும் என்று ராணுவ தலைமையகம் உத்தரவிட்டு இருக்கிறது.

இதேபோல ரெயில்வே துறையும் கொரோனா பாதுகாப்புக்கான வசதிகளை செய்யும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

## இந்தியாவில் கொரோனா ஊரடங்கை அடுத்து

# 135 கி.மீ. தூரத்தை நடந்தே கடந்த மகாராஷ்டிரா வாலிபர் சாதிப்பு

இந்தியா முழுவதும் 21 நாள்களுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால் மகாராஷ்டிரா மாநிலத்தில் சாப்பிட உணவு கூட இல்லாமல் தினக்கூலி வாலிபர் ஒருவர் 135 கிலோ மீட்டர் நடந்தே சொந்த ஊரை அடைந்துள்ளார்.

புதன்கிழமை நள்ளிரவில் இருந்து இந்தியாவில் நாடு தழுவிய ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது வரை இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 600 ஐ தாண்டியுள்ளது. மகாராஷ்டிரா மாநிலத்தில்தான் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. அங்கு எண்ணிக்கை 135 ஐ தொட்டுள்ளது.

ஊரடங்கு உத்தரவை மகாராஷ்டிரா அரசு கடுமையாக பின்பற்றி வருகிறது. வாகனங்கள் ஏதும் ஓடாததால் அங்குள்ள மக்கள் மற்ற இடங்களுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் சந்த்ராபுர் மாவட்டத்தைச் சேர்ந்த 26 வயதான தினக்கூலி வாலிபர் நாக்பூரில் பணி புரிந்து வந்துள்ளார்.

தற்போது வேலை இல்லாததால் சொந்த மாவட்டத்திற்கு செல்ல முடியு செய்தார். வாகனம் ஏதும் இல்லாததால் நடந்தே சொந்த ஊரை அடைய வேண்டும் என எண்ணி, நடக்க ஆரம்பித்தார். சுமார் 135 கிலோ மீட்டர் தூரம் சாப்பிடுவதற்கு உணவின்றி நடந்தே சொந்த ஊரை அடைந்துள்ளார்.

கொரோனா தொற்று குறித்து அச்சப்படாமல் அத்தியாவசிய பொருட்கள் கிடைக்குமா? கிடைக்காதா? என்ற பீதியால் பெரும்பாலானோர் தமது சொந்த கிராமத்திற்கு சென்றுவிட்டனர்.

# மேலும் இரு நபர்களுக்கு தமிழகத்தில் கொரோனா

சென்னை, மார்ச் 27

தமிழகத்தில் மேலும் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 29 ஆக அதிகரித்துள்ளது.

இந்தியாவில் கடந்த சில தினங்களாக கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருகிறது. 600க்கும் மேற்பட்டோருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டு தீவிர மருத்துவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் ஏற்கனவே 26 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில், நேற்று மேலும் இருவருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இத்தகவலை தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

துபாயில் இருந்து திருச்சி வந்த ஈரோடு நபருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தனிமைப்படுத்தப்பட்டுள்ள அவரது உடல்நிலை சீராக உள்ளது என தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், சென்னையில் மேலும் இருவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டு உள்ளது என சுகாதாரத் துறை அறிவித்துள்ளது. இதன்மூலம் தமிழகத்தில் கொரோனாவால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 29 ஆக் உயர்ந்துள்ளது.

# கொரோனா பாதிப்பு நிவாரணத்துக்கு இந்தியாவில் ரூ. 1.70 லட்சம் ஒதுக்கீடு

## நிதி அமைச்சர் நேற்று அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 27

இந்தியாவில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள ஏழைகள் மற்றும் தொழிலாளர்களுக்காக ரூ.1.70 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்படுவதாக மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்துள்ளார். மேலும் கொரோனா சிகிச்சையில் தொடர்புபட்டுள்ளவர்களுக்கு 50 லட்சம் ரூபாவுக்குக் காப்புறுதி செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தடுப்பு நடவடிக்கையாக மார்ச் 31ஆம் திகதி வரை ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் உள்ள நிலையில், மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இன்றுடெல்லியில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: –

கொரோனா தடுப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள ஏழைகள் மற்றும் தொழிலாளர்களுக்காக 1.70 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஊரடங்கு காலத்தில் மக்கள் பசியால் இருக்கக்கூடாது என்பதற்காக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

80 கோடி ஏழை மக்களுக்கு 5 கிலோ கோதுமை அல்லது அரிசி, அடுத்த 3 மாதங்களுக்கு இலவசமாக வழங்கப்படும். வீட்டுக்கு ஒரு கிலோ பருப்பும் வழங்கப்படும். இந்த திட்டத்தின் மூலம், உணவில்லாமல் யாரும் பாதிக்கப்படாத நிலை ஏற்படும். இந்த திட்டங்களின் அடிப்படையில், பொருட்கள் 2 தவணையாக வழங்கப்படும்

சுகாதாரத்துறையில் பணியாற்றும் அனைவருக்கும் ரூ.50 லட்சம் மதிப்பிலான மருத்துவ காப்பீடு செய்யப்படும். மருத்துவர்கள், செவிலியர்கள், தூய்மை பணியாளர்கள் என் அனைவருக்கும் இந்தக் காப்புறுதி செய்யப்படும்.

முறைசாரா தொழிலாளர்களுக்கு, 2 ஆயிரம் ரூபாய் கூடுதலாக வழங்கப்படும். இதன் மூலம் 5 கோடி குடும்பங்கள் நேரடியாகப் பயன்பெறுவர். 100 நாள் வேலை திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சம்பளம் 182 ரூபாயிலிருந்து ரூ.202 ஆக உயர்த்தப்படும். யாரும் பசி, பட்டினியோடு இருந்து விடக்கூடாது என் பதற்காக உதவிகள் அவர்கள் வங்கி கணக்கிலேயே வழங்கப்படும்

விவசாயிகள், விதவைகள், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஜன்தன் யோஜனா திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்படும். விதவைகள், முதியோர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1000 வழங்கப்படும். 20 கோடி பெண்களுக்கு ஜன்தன் கணக்கின் கீழ், மாதம் தோறும் 500 ரூபாய் என அடுத்த 3 மாதங்களுக்கு வழங்கப்படும்.

– இவ்வாறு அவர் கூறினார்.




# தமிழக ஊரடங்கு உத்தரவு ஏப்ரல் 14 வரை நீடிப்பு!

## முதல்வர் பழனிச்சாமி அறிவிப்பு

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்து வருவதைத் தொடர்ந்து மத்திய மற்றும் மாநில அரசுகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. மத்திய அரசு தொடர்ந்து கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளை மாநில அரசுக்கு வழங்கி வருகிறது.

இந்த நிலையில் தமிழக முதல்வர் பழனிசாமி அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். அதன் பின்னர் அவர் தெரிவித்ததாவது: –

பலசரக்குக் கடைகள் காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை மட்டுமே திறந்திருக்க வேண்டும். அத்தியாவசிய பொருட்கள் தடையின்றி கிடைக்க ஐஏஎஸ் அதிகாரிகள் கொண்ட 9 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் மார்ச் 31வரை பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு ஏப்ரல் 14ந்தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மளிகை கடைகள் வீடுகளுக்கே சென்று பொருட்கள் வழங்கலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உபேர் ஸ்விக்கி, உள்ளிட்ட ஆன் லைன் உணவு விநியோக நிறுவனங்களுக்கு தடை தொடர்கிறது. ஊரடங்கால் யாரும் வேலைக்குச் செல்ல இயலாததால் பண வசூலை உடனே நிறுத்தி வைக்க வேண்டும். கால்நடை, கோழி, மீன், முட்டை உள்ளிட்டவற்றை கொண்டு செல்வதற்கு தடையில்லை.

சந்தைகளில் மக்கள் அதிக அளவில் கூடுவதை தவிர்க்கும் வகையில் விசாலமான இடங்களில் கடைகளை அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. காய்கறி பழ வகைகளை விற்கும் போது 3 அடி தூரம் மக்களிடையே இடைவெளி இருக்க வேண்டும்.

கர்ப்பிணிகளுக்கு 2 மாதங்களுக்கு தேவையான மருந்து மாத்திரைகள் வழங்கப்படவேண்டும். அனைத்து வகையான கடைகளிலும் மக்கள் 3 அடி இடைவெளிவிட்டு நின்றே பொருட்களை வாங்க வேண்டும்.

தனியார் வங்கிகள், சிறிய நிதி நிறுவனங்கள், சுய உதவிக்குழுக்கள் கடன் வட்டியை வசூலிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. மீறினால் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும்,

கர்ப்பிணி பெண்கள் நீரிழிவு காசநோய் மற்றும் எச்ஐவி நோயாளிகளுக்கு அரசு மருத்துவமனைகளில் 2 மாதங்களுக்கு தேவையான மருந்துகளை வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவசர உதவி தேவைப்படுவோர் 108 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம். கிரிக்கெட், சந்தையில் மக்கள் கூடுவதை தவரிக்க பெரிய இடங்கள் மைதானங்களில் காய்கறிகள் விற்கலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நாட்டுக்குள் எவ்வாறு வைரஸ் புகுந்தது?

## எங்கு நாம் தவறிழைத்தோம்?

- எம்.எஸ்.எம். ஐயூப் -



இலங்கை ஒரு தீவு. இங்கிருந்து வெளியே செல்லவும் உள்ளே வரவும், ஒரே ஒரு பிரதான வழிதான் இருக்கிறது. அதுதான் கட்டுநாயக்க விமான நிலையம். தவிர, மத்தல, யாழ்ப்பாணம் ஆகிய விமான நிலையங்கள், கப்பல்கள் வரும் சில துறைமுகங்கள் ஆகியன இருந்த போதிலும், இவற்றின் மூலம் மிகச் சிலர் மட்டுமே வருகின்றனர்.

இவற்றையும் கணக்கில் எடுத்தாலும், பொதுவாக நாட்டுக்குள் நுழைவதற்காக மிகச் சில வாயில்களே இருக்கின்றன. எனவே, வருபவர்களை மிக இலகுவாகக் கண்காணிக்கலாம்.

ஆனால், வேறு நாடுகளுடனான நில எல்லைகள் இருக்கும் நாடுகளில், அவ்வாறு நாட்டுக்குள் வருபவர்களைக் கண்காணிப்பது மிகவும் கடினமாகும். உதாரணமாக, நேபாளத்திலிருந்து வெளியேற, 15 பிரதான வீதிகள் இருக்கின்றன. அவற்றில், 13 வீதிகள் இந்தியாவுக்கான வீதிகளாகும்.

இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லை மதிற்சுவரோ, வேலியோ போடப்பட்டு மூடப்படவில்லை. எனவே, அந்தப் பிரதான வீதிகளுக்குப் புறம்பாக, திருட்டுத்தனமாக நேபாளத்திருந்து இந்தியாவுக்கும் இந்தியாவிலிருந்து நேபாளத்துக்கும் நுழையும் பல வழிகள் இருக்கின்றன.

மெக்சிகோவிலிருந்து கள்ளத்தனமாக, பல மெக்சிக்கோகாரார்கள் அமெரிக்காவுக்குள் நுழைவகிறார்கள் எனக் குற்றஞ்சாட்டியே, அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப், இரு நாடுகளுக்கும் இடையில் மதிற்சுவர் ஒன்றை அமைக்கத் திட்டமிட்டார்.

இலங்கைக்குள் நுழைவதற்காக, அவ்வாறான வழிகள் இல்லாததாலும், இருக்கும் சட்டபூர்வமான வழிகளின் எண்ணிக்கையும் மிகவும் குறைவாக இருப்பதாலும், இலங்கைக்குள் வருபவர்களைக் கண்காணிப்பது இலகுவாக இருந்த போதிலும், கொரோனா வைரஸால் உலகமே அச்சுறுத்தப்பட்டு, இருந்த நிலையில், அந்த வைரஸ் தாக்கியவர்கள் பலர், நாட்டுக்குள் நுழைந்து, பலருக்கு அந்த நோயை எவ்வாறு பரப்பினார்கள்?

இலங்கையின் சுகாதாரத்துறையினரும், கொள்கை வகுப்பாளர்களும் இந்த விடயத்தில் கோட்டை விட்டுள்ளார்கள் என்பதையே இது காட்டுகிறது.

> இலங்கைக்குள் வருபவர்களைக் கண்காணிப்பது இலகுவாக இருந்த போதிலும், கொரோனா வைரஸால் உலகமே அச்சுறுத்தப்பட்டு, இருந்த நிலையில், அந்த வைரஸ் தாக்கியவர்கள் பலர், நாட்டுக்குள் நுழைந்து, பலருக்கு அந்த நோயை எவ்வாறு பரப்பினார்கள்? இலங்கையின் சுகாதாரத் துறையினரும், கொள்கை வகுப்பாளர்களும் இந்த விடயத்தில் கோட்டை விட்டுள்ளார்கள் என்பதையே இது காட்டுகிறது.

ஜனவரி மாதம் 27 ஆம் திகதி, இலங்கையில் முதலாவது கொவிட் – 19 நோயாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டார். சீனப் பெண்ணான அவர், அடையாளம் காணப்பட்டவுடன், மக்கள் முகமூடி அணிய ஆரம்பித்தனர். ஓரிரு நாள்களிலேயே கடைகளில் முகமூடிகள் விற்றுத் தீர்ந்துவிட்டன.

அதாவது, மக்கள் அந்நோயின் பாரதுரத்தன்மையை அப்போதும், அறிந்து இருந்தார்கள். ஆனால், சுகாதார அதிகாரிகள், முகமூடிகள் இப்போதைக்குத் தேவையில்லை என்று கூறியதாலும், கடைகளில் முகமூடிகள் இல்லாதமையாலும், பிரத்தியேகமாக அக்கறை செலுத்தத் தவறிவிட்டனர்.

சீனப் பெண், கொவிட் –19 நோயாளி என அடையாளம் காணப்பட்டமையானது, சுகாதாரத் துறையினருக்கு, ஓர் எச்சரிக்கைச் செய்தியைக் கூறியது. அதாவது, வைரஸ் காவிகள், நாட்டுக்குள் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதே ஆகும்.

ஆனால், எங்கே பிழைவிட்டோம் என்று பார்க்க, அதிகாரிகள் முற்படவில்லை. எந்தவொரு வெளிநாட்டவரும், தடையில்லாமல் நாட்டுக்குள் வரக்கூடிய நிலைமை தொடர்ந்தது.

நோய் வேகமாகவும் பரவலாகவும் பரவியிருந்த சீனாவிலிருந்து வருவோரும், கண்டிப்பான முறையில் தனிமைப் படுத்தப்படவில்லை.




அவர்கள், இலங்கையில் தாம் தங்கும் இடங்களிலேயே 14 நாள்கள் சுயமாகத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என, அரசாங்கம் அறிவித்தது. அவர்கள், உண்மையிலேயே உரிய முறைப் படி தனிமைப்பட்டு இருந்தார்களா என்பதை, உறுதி செய்துகொள்ள முறையான பொறிமுறையொன்று இருக்கவும் இல்லை.

மார்ச் மாதம் நடுப்பகுதி வரை, அந்த நிலை நீடித்தது. அப்போது இத்தாலி, தென் கொரியா, ஈரான் ஆகிய நாடுகளில், கொவிட் – 19 நோய் வேகமாகப் பரவிக் கொண்டு இருந்தது. அந்த நாடுகளில் இருந்து பலர், இலங்கைக்கு வருகை தந்து கொண்டும் இருந்தனர்.

ஆனால், அவர்களிடமிருந்து இலங்கையில் உள்ளவர்களுக்கு நோய் பரவாது என்பதைப் போன்றதோர் மனப்பாங்கிலேயே, இலங்கை அதிகாரிகள் நடந்து கொண்டனர்.

மார்ச் மாதம் 11 ஆம் திகதி, இலங்கைப் பிரஜை ஒருவரைக் கொரோனா வைரஸ் தாக்கியிருப்பது கண்டறியப்பட்டது. அவர், உல்லாசப் பிரயாணிகளுக்கு வழிகாட்டும் ஒருவர். மறுநாள், அந்த நபரது நண்பரொருவரும் வைரஸால் தாக்கப்பட்டு இருப்பது தெரிய வந்தது.



அடுத்த நாள், மேலும் மூன்று கொவிட் – 19 நோயாளிகள் கண்டறியப்பட்டனர். அவர்கள் அனைவரும், வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களுடன் பழகியவர்கள் என்பதும் தெரிய வந்தது. அப்போது தான், அரசாங்கம் விழித்துக் கொண்டது.

நோயுள்ளவர்கள் நாட்டுக்குள் வந்தால் மட்டுமே, நாட்டுக்குள் வைரஸ் பரவலாம்; உள்நாட்டவர்கள் நோய்வாய்ப்படலாம். ஏனெனில், ஏனைய நோய்களைப் போலன்றி, இந்த நோயின் காவி மனிதனே.

உள்நாட்டவர்களை நோய் தாக்குவதாக இருந்தால், வெளிநாடுகளிலிருந்து நோய்க் காவிகள், விமான நிலையப் பாதுகாப்புக் கடவைகளை மீறி, உள்ளே சென்றிருக்கிறார்கள் என்பதற்கு இது ஆதாரமாகும். அதாவது, மேலும் பலரும் நோய்க்கு இரையாகி இருக்கலாம்.

இதையடுத்தே, அரசாங்கம் வெளிநாட்டிலிருந்து வருபவர்களைக் கண்காணிக்க நடவடிக்கை எடுத்தது. முதலாவதாக, சீனாவை அடுத்து, மிகவும் கூடுதலாக கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட இத்தாலி, தென் கொரியா, ஈரானிலிருந்து வருவோரை மட்டும், தனிமைப்படுத்தும் மையங்களுக்கு அனுப்ப, நடவடிக்கை எடுக்கப்படடது.

இதுவும் விந்தையான நடவடிக்கையாகும். ஓரிரு நோயாளர்கள் இருக்கும் நாடொன்றிலிருந்து வருபவர் ஒருவர், நோய்க் காவியாக இருக்க முடியாதா? அவ்வாறானவர்களைத் தனிமைப்படுத்தும் நிலையங்களுக்கு அனுப்பத் தேவையில்லையா? தேவையில்லை என்றே அரசாங்கம் கருதியது.

மார்ச் 14, 15, 16, 17 ஆகிய நாள்களில், இலங்கையில், தொடர்ச்சியாகப் புதிதாகக் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் நோயாளர்களின் எண்ணிக்கை முறையே, 05, 08, 10, 15 என அதிகரித்துக் கொண்டே போகும் போதுதான், அரசாங்கம் தாம் விட்ட சில பிழைகளை உணர்ந்தது.

(08ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டுக்குள் எவ்வாறு...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதன்படி, மார்ச் முதலாம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை, வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய இலங்கையர்கள், உடனடியாக அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில், தமது பெயரைப் பதிவு செய்து கொள்ளுமாறு அரசாங்கம் கேட்டுக் கொண்டது.

அவர்கள், எவரெவருடன் பழகினார்கள் என்பது, அதன் பின்னரே ஆராயப்பட்டது. அவர்கள் அதற்குள், ஆயிரக் கணக்கானவர்களுடன் பழகியிருப்பார்கள். அவர்கள் வைரஸ் காவிகளாக இருந்திருப்பின், அவர்கள் மேலும் பலருக்கு அவற்றைப் பரப்பி இருப்பார்கள்.

இவ்வாறு வைரஸ் தொற்றியவர்கள் தான், இப்போது நாளாந்தம் நோயாளராகக் கண்டறியப்படுகிறார்கள். குறைந்த பட்சம், மார்ச் முதலாம் திகதி, நாடு திரும்பியவர்கள் நாட்டுக்குள் நுழைவதற்கு முன்னரே, அவர்களை ஏதாவது ஒரு முறையில் தனிமைப்படுத்தி இருந்தால், நாட்டுக்குள் நோய் பரவுவதைப் பெருமளவில் குறைத்து இருக்கலாம்.

இலங்கை, தீவொன்றாக இருப்பதன் பயனை நாம் அடையவில்லை; இன்னமும் சீனர்கள் தனிமைப்படுத்தப்படுவதும் இல்லை.

பொது மக்களும் இந்தத் தனிமைப்படுத்தலைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றே தெரிகிறது. அதனால் தான், நாம் முன்னர் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டதைப் போல், வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புவோர், தனிமைப்படுத்தலை விரும்பாமல், தமது மனைவி, பிள்ளைகள், பெற்றோர் வசிக்கும் இடங்களுக்குச் சென்றார்கள்.

அவர்களது மனைவி, பிள்ளைகள், பெற்றோரும் அவர்களுக்கு நிலைமையை விளக்கிக் கூறாமல், அவர்களை வரவேற்றார்கள்.

வேறு சிலர், நிலைமையைப் புரிந்து கொள்ளாமல், தமது பிரதேசத்தில் தனிமைப்படுத்தும் நிலையங்களை நிறுவ வேண்டாம் எனப் போராட்டம் நடத்தினார்கள்.

மார்ச் மாதம் 11 ஆம் திகதி முதல், நாளாந்தம் கொரோனா வைரஸ் தாக்கிய நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டு, மக்கள் கூட்டமாகக் கூடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு, சுகாதார அதிகாரிகள் மக்களை அறிவுறுத்திக் கொண்டு இருக்கும் நிலையிலேயே, நாட்டின் பாடசாலைகளுக்கு இடையிலான மிக முக்கிய கிரிக்கெட் போட்டியாகக் கருதப்படும் றோயல் – தோமியன் போட்டி நடைபெற்றது. அந்தப் போட்டியைப் பார்க்கச் சென்ற ஒருவரும், கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு உள்ளாகியிருப்பது, ஓரிரு நாள்களுக்குப் பின்னர் தெரிய வந்தது.

தாம், இந்தப் போட்டியை நடத்த வேண்டாம் எனப் போட்டி அமைப்பாளர்களுக்கு அறிவித்தார் எனவும், ஆனால், அவர்கள் அதைப் பொருட்படுத்தாமல் போட்டியை நடத்தி இருக்கிறார்கள் என்றும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கொவிட் – 19 நோய் நிலைமை பற்றி, நாட்டு மக்களுக்கு வழங்கிய விசேட செய்தியொன்றில் குறிப்பிட்டு இருந்தார். அவரது இந்தக் கூற்று, நாட்டில் முக்கிய பிரமுகர்களும் நிலைமையின் பாரதுரத் தன்மையை உணரவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது.

இந்த கிரிக்கெட் போட்டியை நடத்த வேண்டாம் என, ஜனாதிபதி வெறுமனே கருத்துத் தெரிவிக்காமல், அதைத் தடை செய்ய ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

நாட்டுநிலைமை, அவ்வாறானதொரு போட்டியை நடத்துவதற்குப் பொருத்தமானதாக இல்லை என்பதை, உணர்ந்தமையாலேயே அவர் அதை நடத்த வேண்டாம் எனக் கூறியிருக்கிறார். அவ்வாறாயின், அதைச் சட்டப்படியே தடை செய்யாதது ஏன்?

எல்லாவற்றையும் ஜனாதிபதியே செய்ய வேண்டுமா, ஜனாதிபதியின் ஆலோசனையின் படியே தான் செய்ய வேண்டுமா?

அமைச்சர்களான பவித்திரா வன்னியாரச்சி, டலஸ் அலகப்பெரும ஆகியோரது கருத்தைப் பார்த்தால், ஜனாதிபதியின் ஆலோசனை இல்லாமல், அவர்கள் எதையும் செய்வதில்லைப் போல்த் தான் தெரிகிறது. எதற்கெடுத்தாலும், அதி மேதகு ஜனாதிபதியின் ஆலோசனையின் படி என்றுதான் அவர்கள் கூறிவருகிறார்கள்.

ஆனால், இந்தக் கிரிக்கெட் போட்டியைப் பொறுத்தவரையில், ஜனாதிபதி கருத்துத் தெரிவித்தும், சுகாதார அமைச்சரோ, விளையாட்டுத்துறை அமைச்சரோ அதை நிறுத்த நடவடிக்கை எடுக்கவில்லை; ஏன்?

அத்தோடு, இந்தப் போட்டியின் அமைப்பாளர்கள் படிக்காதவர்கள் அல்லர். அவர்கள், இந்தப் போட்டியை நிறுத்த வேண்டும் என, ஏன் நினைக்கவில்லை? இது, சாதாரண இரு பாடசாலைகளுக்கு இடையிலான போட்டியாக இருந்தால், ஜனாதிபதி வெறுமனே கருத்துத் தெரிவித்துவிட்டு, அமைதியாக இருந்திருப்பாரா?

அமைச்சர்கள், அதிகாரிகள் போட்டியை நடத்த விட்டு இருப்பார்களா? போட்டி அமைப்பாளர்களும் ஜனாதிபதி கருத்துத் தெரிவித்த பின்னர், போட்டியை நடத்தத் துணிந்திருப்பார்களா?

அரசாங்கமும் அதிகாரிகளும், கொரோனா வைரஸ் பிரச்சினையை எந்தளவு பாரதுரமாகக் கணக்கில் எடுத்துள்ளார்கள் என்பதைக் காட்டும் முக்கியமான நிகழ்வாக, இந்தப் போட்டியும் அமைந்துள்ளது.

பொது மக்களும் சரியாக நிலைமையைப் புரிந்து கொள்ளவில்லை. எனவே, மக்கள் ஒருவரை ஒருவர் சந்திப்பதைத் தடுப்பதற்காக, அரசாங்கம் முதலில் அரச அலுவலகங்களுக்கு விடுமுறை வழங்கிய போது, பலர் அந்த விடுமுறையைப் பாவித்து, உல்லாசப் பயணங்களில் ஈடுபட்டு இருந்தார்கள்; சிவனொளிபாத மலைக்கு யாத்திரை சென்றிருந்தார்கள்.

மார்ச் மாதம் 11ஆம் திகதி முதல், இன்று வரை இலங்கையில் கொவிட் –19 நோயாளர்கள் அடையாளம் காணப்படாத நாளே இல்லை. நோய் பரவும் நிலைமை, வழமை நிலைமைக்குத் திரும்பி வருவதாகவும் கூற முடியாது.

சில நாள்களில் சுமார் ஐந்து நோயாளர்கள் கண்டறியப்பட்ட போதிலும், சில நாள்களில் அந்த எண்ணிக்கை ஒன்பதாகவும் பத்தாகவும் அதிகரித்திருந்தது. புதன்கிழமை (25) நோயாளர் எண்ணிக்கை 102ஐத் தாண்டி இருந்தது; அவர்களில் இருவரது நிலைமை மோசமாகவும் இருந்தது.

உலகில் பல செல்வந்த நாடுகளே, கொரோனா வைரஸ் தாக்குதலால் செய்வதறியாது தடுமாறுகின்றன. இந்தநிலையில், வெளிநாட்டுக் கடனில் தங்கியிருக்கும் இலங்கை, மிக ஆபத்தானநிலையில் இருப்பதைச் சகலரும் உணர வேண்டியிருக்கிறது. பொறுப்புடன் நடந்து கொள்ள, எமது அகம் பாவம் சில வேளைகளில் இடங்கொடுக்கா விட்டாலும், அவ்வாறு நடந்து கொள்ள நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம் என்பதே உண்மை.

நன்றி –
இலக்கியா இணையம்

# கேணல், மகன், தாயார் மூவருக்கும் கொரோனா

இராணுவ கேணல் ஒருவரும், அவரது மகனும் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இவர்கள் சிகிச்சைகளுக்காக அங்கொடை தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

இந்தக் கேணலின் தாயும் கொரோனா வைரஸ் தொற்றின் அறிகுறிகள் காரணமாக கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக் கழகத்துக்குச் சொந்தமான வேரஹெர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே 22 ஆம் கொரோனா நோயாளராக இராணுவ மேஜர் ஒருவர் அடையாளம் காணப்பட்டிருந்தார். அவர் இத்தாலியில் இருந்து வந்தோரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பும் நடவடிக்கையில் நேரடியாக ஈடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# விளக்கமறியலில் இருக்கும் உதயங்க மருத்துவமனையில்!



மஹிந்த ராஜபக்ஷவின் மைத்துனரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவருமான உதயங்க வீரதுங்க கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தற்போது மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெற்று வருகிறார் என மருத்துவமனை செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

விமானப் படைக்கு 'மிக்' விமானங்களைக் கொள்வனவு செய்த ஒப்பந்தம் தொடர்பான கொடுக்கல் – வாங்கலில் இடம்பெற்றது எனக் கூறப்படும் நிதி மோசடி சம்பந்தமாக அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறிய லில் வைக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு
சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள
இவையனைத்தையும் ஒரே கூரையின்
கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள்
பொதிகள் சேவை
உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை
பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப்
பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com



படம்1



படம் 2

# தினம் ஒரு தலைப்பு சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்

நேற்றைய தினம் எமக்கு சித்திரங்களை அனுப்பிவைத்த அனைவருக்கும் நன்றி. நேற்றைய போட்டி 'வீட்டுக்குள் வாழ்வு' என்ற தலைப்பில் இடம் பெற்றது.

பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றினர்.

அவர்கள் அனுப்பி வைத்தவற்றில் தெரிவுசெய்யப்பட்ட இரு சித்திரங்கள் வாசகர்களாகிய உங்களின்பார்வைக்கு.

**படம்1**

வரைந்தவர்
வெஸ்ரினா கிரங்லினோ
தரம் 06,
மன்/ அல் அஸார் தேசிய பாடசாலை

**படம் 2**

வரைந்தவர்
ஆறுமுகதாஸ் ஆதிரையன்
தரம் 2
வவுனியா இறம்பைக்குளம் மகளிர் ம.வி.

இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத்தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு – பகிர்ந்துண்ணுதல்


# சசிகா லேணர்ஸ்



முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றத் தரப்படும்.

தலைமை காரியாலயம்.
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

## THE SASIKA LEARNERS

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

கிளை நிறுவனங்கள் –

**வேலணை**
வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472
070 301 3012

**காரைநகர்**
021 225 2454
070 510 2484

**கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.**
021 224 3393
070 301 3014

**பண்டத்தரிப்பு**
021 225 2333
071 255 4135

**சங்கானை**
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
070 301 3016

**பருத்தித்துறை வீதி, நெல்லியடி**
021 226 0999
071 775 0999

**யாழ்ப்பாணம் (Town)**
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
021 221 5472
07 301 3012

# கல்முனை வடக்கு உப பிரதேச செயலகப் பிரிவில் நடமாடும் வியாபாரிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள்

## நேற்று வழங்கி வைக்கப்பட்டன

அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு உப பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மக்களுக்கு அத்தியாவசிய பொருள்களை விற்பனை செய்யும் நடமாடும் வியாபாரிகளுக்குரிய அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

நடமாடும் வியாபாரிகளுக்கான அனுமதிப்பத்திரம் வடக்கு பிரதேச செயலாளர் ரீ.ஜே. அதிசயராஜினால் வழங்கி வைக்கப்பட்டது.

நாட்டில் வேகமாக பரவி வரும் கொரோனாத் தொற்றில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் நாடாளாவிய ரீதியில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டு உள்ள நிலையில் மக்களின் ஒன்றுகூடல் தவிர்ப்பதற்காகவும், இலகுவில் மக்களிடம் பொருள்கள் சென்றடையும் நோக்கிலும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அன்றாட மக்களின் இயல்பு வாழ்க்கை எந்த விதத்திலும் பாதிக்கப்படக் கூடாது என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு கல்முனை பொலிஸாரும் கல்முனைப் பிரதேச செயலாளரும் இணைந்து இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இதன் போது வெளி மாவட்டங்களில் இருந்து கொண்டு வரப்படும் மரக்கறி வகைகளுடன் அத்தியாவசிய பொருட்கள். மக்களது வீடுகளுக்கு நேரடியாகச் சென்றடையக் கூடிய வகையில் நடமாடும் வியாபாரிகள் மூலமாக மக்களுக்கான இந்த விநியோகத் திட்டம் முன்னெடுக்கப்படும் என பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

வியாபாரிகள் அதிக விலைக்குப் பொருள்களை விற்க கூடாது எனவும், பொருள்களின் விலைப்பட்டியல் மற்றும் விற்பனைக்கு இல்லாத பொருள்களின் பெயர் பட்டியலும் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனவும், இந்த வியாபாரிகள் பொது சுகாதார உத்தியோகஸ்தர்களின் கண்காணிப்பின் அடிக்கடி பரிசோதனைக்கு உட்படுத்தபடுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

வியாபாரிகள் அனைவரும் பொது நலன் சார்ந்த சேவையாகவே இதனை கருத வேண்டும். மாறாக, மக்களிடம் அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்யக் கூடாது. அவ்வாறு விற்பனை செய்பவர்களின் அனைத்து உரிமங்களும் ரத்து செய்யப்படும்.

மேலும், வெளிநாட்டில் இருந்து வருகை தந்துள்ள 150க்கும் மேற்பட்ட நபர்கள் கல்முனை பிரதேசத்தில் சுய தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். ஆகவே அவர்கள் நடமாடும் வியாபாரத்தில் சம்பந்தப்படுவது தொடர்பில் நாம் தற்காலிக தடையை மேற்கொண்டிருக்கின்றோம்.

நடமாடும் வியாபாரிகள் அனைவரும் மக்கள் ஒன்று சேர்வதை தவிர்க்கச் செய்து அவர்களிடம் தேடிச் சென்று சேவை செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். – என வர்த்தகர்களிடம் மேலும் தெரிவித்தார் பிரதேச செயலர்.

# பிரான்ஸில் கொரோனாவுக்கு பலியானவர் தாவடி இளைஞர்



யாழ்ப்பாணம், மார்ச்27

பிரான்ஸில் கொரோனா வைரஸின் தாக்கத்தால் பலியான யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞன் தொடர்பில் மேலதிக தகவல்கள் வெளியாகியுள்ளன.

யாழ்ப்பாணம், தாவடி, கொக்குவில் வேம்படி முருகமூர்த்தி கோயிலடியைச் சேர்ந்த குணரட்ணம் கீர்த்திகன் (கீர்த்தி–வயது 32) பிரான்ஸில் கிறித்தை பகுதியில் வசித்துவந்துள்ளார்.

இவருக்குத் திருமணமாகி 2 வயதில் ஒரு பெண்குழந்தை உள்ள நிலையில் இவருடைய மனைவி 5 மாதக் கர்ப்பிணி ஆவார்.

அண்மையில் சுவிஸ் நாட்டிற்கு இவர் சென்று திரும்பினார் எனத் தெரிவிக்கப்படும் அதேவேளை, நீரிழிவு நோயும் இவருக்கு இருந்துள்ளதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

14 நாழ்ல்கள் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு, நோய் அதிகரித்த நிலையில் 8 தினங்கள் மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் இருந்துள்ளார்.

இறுதியாக மனைவியை மட்டும் பார்க்க அனுமதித்தனர். இவருடைய உடலை குடும்பத்தினரிடம் கையளிக்க மறுத்துவிட்டனர் என்று கூறப்பட்டது.

# நீர்வை பொன்னையன் நேற்றுக் காலமானார்



கொழும்பு,மார்ச்27

எழுத்தாளர் நீர்வை பொன்னையன் நேற்றுக் கொழும்பில் காலமானார்.

1931 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் நீர்வேலியில் பிறந்த இவர், 'நீர்வை பொன்னையன்' என்ற பெயரில் கடந்த 50 வருடமாக தீவிரமாக இடதுசாரிய கொள்கைகளின் வழி இலக்கியத்தில் செயற்பட்டு வந்தார்.

சிறுகதை, கட்டுரை, நாட்டார் இலக்கியம் என இலக்கியத்தின் பல்வேறு வடிவங்களில் இயங்கி வந்தவர்.

மேடும் பள்ளமும் (1961) என்ற முதலாவது சிறுகதை தொகுப்பை தொடர்ந்து, காலமாகும் வரை இலக்கியத்தில் தீவிரமாக செயற்பட்டவர். அவரது சிறுகதை தொகுப்பொன்று அச்சுப்பணியில் இருக்கும் பொழுது அவர் காலமானார்.

அண்மைக்காலமாக தொண்டைப் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு வந்த இவர், அதற்காகச் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கொழும்பில் காலமானார்.




காலைக்கதிர் Kalaikathir

பகிர்ந்துண்ணுதல்



16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கானது

தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

இன்று (27/03/2020) தலைப்பு
பகிர்ந்துண்ணுதல்

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

* உள்ளூரில் கடைகளைத் திறக்கலாம்; நடந்து சென்றே கொள்வனவு
* வீதிகளில் மீன், மரக்கறி கொண்டு சென்று வீடுகள் தோறும் விற்கலாம்
* அத்தியாவசியப் பொருள்களுடன் வாகனங்களில் நடமாடும் கடைகள்

# ஊரடங்கு சமயத்தில் இயல்பு வாழ்க்கைக்கான ஏற்பாடுகள் ஆளுநரின் வழிகாட்டலில் நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

வட மாகாணத்தில் ஊரடங்கு சமயத்தில் மக்களின் அவசர தேவைகளை நிறைவு செய்வதற்கான பல்வேறு வழிமுறைகள் குறித்து நேற்றுத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

வடமாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக வடமாகாண ஆளுநர் செயலகத்தில் யாழ் மாவட்ட கட்டளை தளபதி, யாழ் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் ஏனைய அரச உயர் அதிகாரிகள் ஆகியோர் பங்கு பற்றிய விசேட கலந்துரையாடலிலேயே ஊரடங்கு நேரத்தில் பொதுமக்களுக்கான சேவைகள் கிடைப்பதற்கான நடை முறைகள் தொடர்பில் பதீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அந்த வகையில், ஊரடங்கு நேரத்தில் பொதுமக்களிற்கான சேவைகள் கிடைப்பதற்கான நடைமுறைகள் பின்வருமாறு: –

### பலசரக்கு பொருட்கள்

* உள்ளூர் பலசரக்கு கடைகள் பொது மக்களின் தேவைகளுக்காக தொடர்ந்து திறந்து நடாத்துவதற்காக அனுமதி வழங்கபட்டுள்ளது. சுற்று வட்டாரத்தில் உள்ள மக்கள் வாகனங்களை பயன்படுத்தாது நடந்து சென்று தமக்கு தேவையான பொருள்களை வாங்குவதற்கு அனுமதியளிக்கபட்டுள்ளது. இந்நோக்கத்திற்காக வாகன பயன்பாடு அனுமதிக்கப்படமாட்டாது.

* பலசரக்கு கடைகள்/அங்காடி விற்பனை நிலையங்கள் அவசியமான ஐந்து அல்லது ஆறு பொருட்களை 500 ரூபாய், 1000 ரூபாய் பெறுமதியான பொதிகளாக்கி வாகனங்களில் கொண்டு சென்று விற்பனை செய்ய முடியும்.

### மரக்கறி வகைகள்

* தற்போது உள்ள சூழ்நிலையில் சந்தைகளை இயக்குவதில் உள்ள நடைமுறை சிக்கல்களை கருத்தில் கொண்டு பின்வரும் ஒழுங்குகள் செய்யபட்டுள்ளன.:–

* மரக்கறி வியாபாரிகள் தாங்களாகவே உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்து உள்ளூரில் விற்பனை செய்யலாம். இதற்கான ஏற்பாடுகளை பிரதேச செயலாளார், உள்ளூராட்சி சபைகள், கமநல சேவைகள் திணைக்களம், விவசாய திணைக்களம் என்பன இணைந்து பொருத்தமான நடைமுறைகளை ஏற்படுத்தல் வேண்டும்.

### கடல் உணவுகள்

* ஊரடங்கு நேரத்தில் மீன் பிடிப்பதற்கான அனுமதி வழங்கபட்டுள்ளது. சந்தைகளில் மீன் விற்பது தடை செய்யபட்டுள்ளது. மாற்று ஒழுங்காக அவற்றை வியாபாரிகள் வீதிகளில் கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு அனுமதியளிக்கபட்டுள்ளது.

### வெதுப்பகம்

* ஊரடங்கு நேரத்தில் வெதுப்பகங்கள் இயங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது வெதுப்பகங்களின் உற்பத்திகளை நடைமுறையில் உள்ள விநியோக முறைப்படி வாகனங்கள் மூலம் மக்களுக்கு விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கபப்ட்டுள்ளது.

### அரிசி ஆலை

* அரிசியின் சீரான விநியோகத்தை மேற்கொள்வதற்காக அரிசி ஆலைகள் இயங்குவதற்கு அனுமதியளி க்கபட்டுள்ளது.

* வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் இருந்து யாழ் மாவட்டதிற்கு அரிசி கொண்டு வருவதற்கு அனுமதியளிக்கபட்டுள்ளது.

* வடமாகாணத்திற்கான அரிசி இருப்பை உறுதிபடுத்தும் பொருட்டு ஏனைய மாகாணங்களுக்கு அரிசி கொண்டு செல்வது தொடர்பாக உரிய மாவட்ட அரசாங்க அதிபர்களுடன் கலந்துரையாடி தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

### ஐஸ் தொழிற்சாலை

* மீன் பிடி தொழிலுக்கு தேவையான ஐஸ் கட்டிகளை உற்பத்தி செய்வதற்கான அனுமதியளிக்கபட்டுள்ளது.

### மருந்தகம்

* மருந்தகங்கள் ஊரடங்கு நேரத்தில் திறந்திருக்கும்.

* வைத்திய மருத்துவ குறிப்பேடு மற்றும் கிளினிக் கொப்பிகளுடனும் சென்று மருந்துகளை பெற்று கொள்ளலாம்.

* கிளினிக் கொப்பியுடன் அருகில் இருக்கும் வைத்தியசாலைக்கு செல்ல நோயாளர்களிற்கு அனுமதி வழங்கபட்டுள்ளது.

* இவ்வொழுங்குகளை யாழ் மாவட்டத்தில் உடனடியாக நடைமுறைப்படுத்துவதுடன் ஏனைய மாவட்ட அரசாங்க அதிபர்கள் தங்கள் மாவட்ட பாதுகாப்புபடையினர் மற்றும் பொலிஸாருடன் இணைந்து அவர்களின் ஆலோசனைகளை பெற்று, நடைமுறை படுத்துமாறும் அரசாங்க சுற்று நிரூபங்கள் மற்றும் தற்போதுள்ள விசேட நடைமுறைகளுக்கு அமைவாக இந் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

## வீட்டை வழங்கினார் சுசந்த

கொழும்பு, மார்ச் 27

திருகோணமலை மாவட்டத்தில் கொரோனா நோய்க்குறிய அறிகுறிகள் காணப்படும் நோயாளர்களைத் தனிமைப் படுத்தி சிகிச்சை அளிப்பதற்காக திருகோணமலை மாவட்ட முன்னாள் அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே தமது வீட்டை வழங்கியுள்ளார்.

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் வீ. பிரேமானந்திடம், இந்த வீடு கையளிக்கப்பட்டது.

இதேவேளை பொது இடங்களில் தொற்று நீக்கும் விடயங்களை மேற்கொள்ளும் நோக்கில், அவரது சொந்த நிதியுதவியுடன் கிருமி நாசினி தெளிக்கும் கருவிகளையும் அனைத்து பிரதேச சபைகளுக்கும் வழங்கினார்.

## தமிழ், சிங்களப் புது வருடத்துக்கு இம்முறை முற்பணம் கிடையாது!

ஏப்ரலில் வரும் தமிழ், சிங்களப் புது வருடத்திற்கான சம்பள முற்கொடுப்பனவு இம்முறை வழங்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து இலங்கை தப்பிக்கவில்லை. தற்போதுவரை 106 பேர் ஸ்ரீலங்காவில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் கொரோனா பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக நாடு தழுவிய ரீதியில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டு பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இந்நிலையில் தமிழ், சிங்கள புது வருடத்திற்கான சம்பள முற்கொடுப்பனவு பத்தாயிரம் ரூபா அரச ஊழியர்களுக்கு இம்முறை வழங்க நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்று பொது நிர்வாக சுற்றுநிரூபம் 07/2020 மூலம் அரசு அறிவித்துள்ளது.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை




20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி,
கஸ்தூரியார் விதி யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் – இல, 01, பெற்றோல் செற்லேன்,
நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி – இல.01 NDB வங்கிக் கட்டடம்,
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.03.2020 இல் வெளியிடப்பெற்றது.